வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 02.12.2023 சனிக்கிழமை | இதழ் : 356 | பக்கங்கள் : 12


மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்

Ria றியா பணப்பரிமாற்றும்

Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தி அமைக்கப்படும்!

## அமைச்சர் விஜதாச ராஜபக்ஷ மீண்டும் உறுதி

### மாவீரர் நாளில் கைதானோரை விடுவிக்க மக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சு



கொழும்பு, டிசெம்பர் 02

**சகல தரப்பினரின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தியமைக்கப்படும். இந்த சட்டமூலம் குறித்து எதிர்வரும், ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்துக்குள் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும் - இவ்வாறு நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.**

அத்துடன், மாவீரர் நாளில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சு நடத்துவேன் என்றும் அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், "அடக்குமுறைகளால்தான் இந்த நாட்டில் போர் மூண்டது. கடந்த அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் 'அறகலய' தோற்றம் பெற்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

11

# மின்சார கட்டணம் மீண்டும் உயரும்!

## திறைசேரி பிரதி செயலர்

கொழும்பு, டிசெ. 02

மின்சார கட்டணம் மீண்டும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது என்று திறைசேரியின் பிரதி செயலாளர் ஏ. கே. செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

அரச நிதி செயல்குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுத்திகரிக்கப்பட்ட பெற்றோல், டீசல் என்பனவற்றுக்கு பெறுமதி சேர் வரி விதிக்கப்படவுள்ளது. எனினும், மண்ணெண்ணெய்

11

# போதகர் ஜெரோம் விளக்கமறியலில்!

கொழும்பு, டிசெ. 02

பௌத்த மதத்துக்கு எதிராக பேசினார் என்ற சர்ச்சையில் சிக்கி கைதான கிறிஸ்தவ மத போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கடந்த நவம்பர் 29ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பினார். நாடு திரும்பிய 48 மணி நேரத்துக்குள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முற்பட்டு

11

### வெளியானது ஓ. எல். பெறுபேறு:

# வேம்படியில் 115 பேருக்கு யா/இந்துவில் 74 பேருக்கு 9A

யாழ்ப்பாணம், டிசெ. 02

க. பொ. த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதில், யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் 115 மாணவிகள் 9 பாடங்களிலும் 'ஏ' பெறுபேற்றை பெற்றனர். தவிர, 8 பாடங்களில் ஏ பெறுபேற்றை 59 மாணவிகளும், 7 பாடங்களில் ஏ பெறுபேற்றை 22 மாணவிகளும் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி தமிழ் மொழி மூலமான பெறுபேற்றின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 74 மாணவர்கள் 9

11

# போதைப்பொருள் பயன்பாட்டாலும் யாழில் எய்ட்ஸ் பரவியிருக்கலாம்!

## வடக்கில் 90, யாழில் 65 எச். ஐ. வி. தொற்றாளர்

### வடக்கு பால்வினை நோய் தடுப்பு மருத்துவர்



யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையால் எய்ட்ஸ் தொற்று நோய் பரவலும் அதிகரித்திருக்கலாம் என்று வட பிராந்திய பால்வினை நோய்தடுப்பு சிகிச்சை நிலைய மருத்துவர் ஏ. றொகான்

11

# வேம்படி மகளிர் மாணவி தேசிய ரீதியில் 2ஆம் இடம்



யாழ்ப்பாணம், டிசெ. 02

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் வேம்படி உயர்தர பாடசாலை மாணவி அக்சயா அனந்தசயனன் தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதில், 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்று தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற அக்சயா செய்தியாளர்கள்

11

# தமிழரசு கட்சி தலைமைக்கு இருவர் போட்டி என்பது தவறு

## சுமந்திரன் எம். பி. சொல்கிறார்

மன்னார், டிசெ. 02

தமிழரசு கட்சியின் தலைமைக்கு இருவர் போட்டியிடுகிறார்கள் என்று சொல்வது தவறு. பலரின் பெயர்கள் முன்மொழியப்படுகின்றன. கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் 200இற்கும் மேற்பட்டவர்கள் கூடி வாக்களித்து தீர்மானிப்பார்கள். எவர் வெற்றி பெற்றாலும் இணைந்து கட்சி அங்கத்தவர்களாக நாங்கள் செயல்படுவோம் - இவ்வாறு தமிழரசு

11

# கிழக்கில் சதொச கிளைகள் மூடல் தமிழ், முஸ்லிம்கள் பெரும் பாதிப்பு

## ரிஷாத் எம். பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 02

கிழக்கு மாகாணத்தில் சதொச கிளைகள் மூடப்பட்டுள்ளன. இதனால், அங்கு பணியாற்றியவர்கள் வெளி மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். குறைந்த சம்பளத்தில் அவர்கள் பெரும்

11



# மோடி - ரணில் சந்திப்பு

டுபாய், டிசெ. 02

டுபாயில் நடைபெறும் காலநிலை மாநாட்டின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இது தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது எக்ஸ் வலைதளத்தில் தமிழில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் "கோப்-28 நடவடிக்கைகளுக்கு மத்தியில், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க கிடைத்தது. பல்வேறு பிரச்னைகளை இணைத்து விவாதிப்பது எப்போதும் அருமையானது" என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது

விளையாட்டுத்துறை அமைச்சர் திடீரென்று கிரிக்கெட் சபையை சீர்த்திருத்தப் போவதாகக் கூறிக்கொண்டு, ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டுசெல்லாமல் அர் ஜூன ரணதுங்க தலைமையில் குழு ஒன்றை நியமித்தமை சில நாட்களாக பேசு பொருளாகி யிருந்தது.

அவர் ஆரம்பத்தில் ஜனாதிபதியின் பணிக்குழு பிரதானியான சாகல ரத்நாயக்க மீதே தனது அதிருப்தியை வெளியிட்டார். அப்போது ஜனாதிபதி மீது தனக்கிருக்கும் மரியாதையையும் வெளிப்படுத்தினார்.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அவர் தனது போக்கை மாற்றிக்கொண்டு ஜனாதிபதி மீதான விமர்சனத்தையும் வைக்கத் தொடங்கினார்.

அப்போதும்கூட அவற்றைக் கண்டுகொள்ளாத ஜனாதிபதி, பாராளுமன்றில் தனக்கு எதிராக அவர் மிகப்பெரிய குற்றச்சாட்டை முன்வைத்த போது வேறு வழியின்றி அவரை பதவியிலிருந்து நீக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தார்.

தனது உயிருக்கு ஜனாதிபதியாலும் சாகல ரத்நாயக்கவாலும் அச்சுறுத்தல் இருப்பதாகவும் அப்படி தனக்கு ஏதாவது நடந்தால் அவர்கள் இருவருமே பொறுப்பு என்றும் அவர் பாராளுமன்றத்தில் கூறியபோது ஜனாதிபதிக்கு வேறு வழி இருக்கவில்லை.

ஆனால், அப்போதும்கூட அவரை அப்படியே இன்னும் சில நாட்களுக்கு விட்டிருந்தால் அவர் காணாமல் போயிருப்பார் என்றும் ஜனாதிபதி அவசரப்பட்டுவிட்டார் எனவும் தெற்கில் சிலர் விமர்சனங்களை முன்வைத்தனர்.

ஆனால், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரான ரொஷான் ரணசிங்க ஏன் இப்படியெல்லாம் திடீரென்று 'தனி ஆவர்த்தனம்' ஆடத் தொடங்கினார் என்று இதற்கு முன்னரும் இந்தப் பத்தியில் ஒரு தடவை எழுதியிருந்தேன்.

அதாவது, அவரின் ஆஸ்தான சோதிடர் அவரின் சோதிட பலனின்படி அவர் நாட்டின் தலைவராவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்று தெரிவித்திருந்தமையைத் தொடர்ந்தே அவர், கிரிக்கெட் சபையை கையில் எடுத்தார் என்பதும் அவர் தன்னை ஓர் ஊழலுக்கு எதிரான ஆளாகக் காட்ட முயற்சி செய்ததும் தெரிந்தவைதான்.

ஆனால், அவரது இந்த ஜனாதிபதி பதவி ஆசைக்கு யார் தீனி போட்டார்கள் என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றது.

அவரை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு முன்னதாக - அதாவது அவர் பாராளுமன்றில் ஜனாதிபதி மீது குற்றம்சுமத்தி உரையாற்றிய அன்று பாராளுமன்றத்துக்கு சென்ற ஜனாதிபதி அங்கேயே அமைச்சரவை கூட்டத்தை நடத்தியதும் அந்தக் கூட்டத்தில் வைத்து அவரிடம் இரண்டு கேள்விகளைக் கேட்டதும் ஏற்கனவே 'ஈழநாடு'விலும் செய்திகளாக வந்திருந்தன.

அதாவது எதற்காக அவர் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு சென்று எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தார் என்று ஜனாதிபதி அவரிடம் கேட்டபோது அதற்கு அவரிடம் பதில் இருக்கவில்லை.

ஆனால், அந்தச் செய்தி வெளிவந்த பின்னரே தெற்கு ஊடகவியலாளர்கள் அது குறித்த தமது புலனாய்வு வேலையைத் தொடங்கிய போதுதான் பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றன.

ரொஷானின் விருப்பத்தை அறிந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித், அவரை சந்தித்து எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராக போட்டியிட அவருக்கு தான் சந்தர்ப்பம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அப்படி போட்டியிடுவதெனில் அதற்கு முன்னதாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இதுபோன்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பது நல்லது என்றும் அவரே ஆலோசனை சொன்னார் என்றும் அதனையடுத்தே அவர் தனது எதிர்ப்பை சாகலவுடன் நிறுத்திக்கொள்ளாமல், ரணில் மீதும் திருப்பியதாகவும் தெற்கு ஊடக நண்பர் ஒருவர் தெரிவித்தார்.

ஆக, ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஒரு பொது வேட்பாளரை களம் இறக்கும் முடிவில்தான் சஜித் இருக்கிறார் என்பதை இந்த ஊடகரின் செய்தி வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஜே. வி. பி. தலைவர் அநுர குமாரவுக்கே தெற்கில் ஆதரவு அதிகமாக இருக்கின்றது (அது அவர் ஜனாதிபதியாக போதுமானதல்ல என்றாலும்) என்று ஏற்கனவே சில மேற்குலக ஆதரவு என். ஜி. ஓக்கள் நடத்திய கருத்துக்கணிப்புகள் தெரிவிப்பது குறித்தும் இது மற்றைய அனைவரையும் ஓரணியில் இணைப்பதற்கான மேற்கின் முயற்சியாக இருக்கலாம் என்றும் முன்னர் இந்தப் பத்தியில் எழுதியது ஞாபகமிருக்கலாம்.

ஆனால், சஜித்தோ ரணிலுக்கு எதிராக பொதுவேட்பாளரை களமிறக்க - அது தான் அல்ல என்பதையும் ஒப்புக்கொண்டிருப்பது பல விடயங்களை வெளிச்சம் போட வைத்திருக்கின்றது.

எது எப்படியோ, ரொஷான் தன்னை ஊழலுக்கு எதிரானவராக காட்டி நடத்திய 'ஆட்டம்' எதற்காக என்பது வெளிச்சத்துக்கு வந்ததால் அவர் அம்பலப்பட்டு நிற்கிறார். சஜித்தும்தான்.!

- ஊர்க்குருவி.

# தேர்தலை ஒத்திவைக்க அரசு சூழ்ச்சி!

## எதிர்க்கட்சி கண்டனம்

கொழும்பு, டிசெ. 02

ஜனநாயகத்தை இல்லாதொழிக்கும் வகையில் தற்போதைய அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்திவைத்துள்ளதாகவும், 2025 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்படும் என ஜனாதிபதி அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்தாலும், அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அவ்வாறான அதிகாரங்கள் இல்லை என எதிர்க்கட்சி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எல்லை நிர்ணய குழுக்களை நியமித்தல், நிதியில்லை எனக் கூறுவது, தேர்தல் நடத்தப்படக் கூடாது என்று நீதிமன்றத்திற்கு செல்வது, தேர்தல் திணைக்கள அதிகாரிகளை ஜனாதிபதி அழைப்பது, தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மூலம் கட்டுப்பணங்கள் ஏற்றுக் கொள்வதை நிறுத்துவது, அமைச்சரவை தீர்மானங்களை எடுப்பது, தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான வரைவுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது, தேர்தலை நடத்தினால் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாது போகும் எனக் கூறுவது, தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை பதவி விலகக் கோருவது மற்றும் இராஜினாமா செய்ய கட்டாயப்படுத்தல் போன்ற பல்வேறு உபாயங்களை கையாண்டு தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

தரம் குறைந்த உரங்களை இறக்குமதி செய்யவும், நட்புவட்டார நண்பர்களுக்கு கோடிக் கணக்கான வரிச்சலுகைகளை வழங்கவும் அரசாங்கத்திடம் பணம்உள்ளது. ஆனால், தேர்தலை நடத்த ஏன் பணம் இல்லை? என்றும் கேள்வி எழுப்பினார்.

(அ)

# வவுனியாவில் 21 எய்ட்ஸ் நோயாளர்கள்

வவுனியா, டிசெ. 02

வவுனியா மாவட்டத்தில் 21 எச். ஐ. வி. தொற்றாளர்கள் உள்ளனர். இந்த வருடம் 2 புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொது மருத்துவமனையின் பாலியல் நோய் தடுப்புப் பிரிவின் மருத்துவ அதிகாரி மருத்துவர் அருள்மொழி பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச எய்ட்ஸ் தினமான நேற்று வவுனியா பொது மருத்துவமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

சமூகத்தை வலுப்படுத்துவோம் - எய்ட்ஸ் தடுப்போம் எனும் தொனிப்பொருளில் 35ஆவது எய்ட்ஸ் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இலங்கை எச்.ஐ.வி நோய் பரவல் குறைந்த நாடாகவே கருதப்படுகின்றது. இங்குள்ள சனத்தொகை அடிப்படையில் 0.1 வீதத்துக்கு குறைவானவர்களே தொற்றுக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

எச்.ஐ.வி தொற்று பாதுகாப்பற்ற உடலுறவின் மூலம் ஏற்படுகின்றது. ஓரின சேர்க்கையாளர்கள் கூடிய அளவில் தொற்றுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பாக 52 வீதமாக காணப்படுகின்றார்கள்.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் 2002ஆம் ஆண்டு முதல் 33 எச். ஐ. வி தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். இவர்களில் 19 ஆண்களும் 13 பெண்களும் அடங்குகின்றனர். இதில் 12 பேர் உயிரிழந்து விட்டனர். தற்போது வவுனியாவில் 21 எச்.ஐ.வி தொற்றாளர்கள் சிகிச்சை சுகதேகிகளாக உள்ளனர்.

இவர்களில் 12 ஆண்களும், 9 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இந்த ஆண்டு, 2 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் இருவரும் ஆண்களாக காணப்படுகின்றனர்.

2030இல் எய்ட்ஸ் பரவலை முடிவுக்கு கொண்டுவரும் மகத்தான இலக்கை நோக்கிய முதலாவது படியாக எச்.ஐ.வி பரிசோதனை உள்ளது. இந்த பரிசோதனையை இலங்கையில் உள்ள அனைத்து பால்வினை தொற்று தடுப்பு சிகிச்சை நிலையங்களிலும் இலவசமாக செய்ய முடியும். அதன் முடிவுகள் இரகசியமாகவும் பேணப்படும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# வெள்ளத்தில் மிதக்கும் தருமபுரம் பொது சந்தை



கிளிநொச்சி, டிசெ. 02

தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் தருமபுரம் பொதுச் சந்தையில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. இதனால், சந்தைக்கு வரும் பொதுமக்கள், வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சந்தை கட்டடத்தின் கூரையிலிருந்து மழைநீர் ஒழுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறி வியாபாரத்தை வாழ்வாதாரமாக கொண்டு செல்லும் வியாபாரிகள் இதனால் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்குவதாக தெரிவித்தனர். அத்துடன், இந்தக் குறைபாடுகளை சீர்படுத்தி தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

# வடமராட்சியில் வீட்டின்மீது பெற்றோல் குண்டு வீச்சு!

வடமராட்சி, டிசெ. 02

கரவெட்டியில் வீடு ஒன்றின்மீது இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டு தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், வீட்டிலிருந்த உடைமைகள் பலவும் சேதமடைந்தன.

அத்துடன், தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டின் பின் பகுதியில் இருந்து பெற்றோல் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02)

# அனுபவ பகிர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 02

80ஆவது வயதை எட்டியுள்ள தோழர் சி. கா. செந்திவேலின் 60 வருட அரசியல் பயணத்தின் அனுபவ பகிர்வும் கருத்துரைகளும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் தோழர் கா. செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

# பேருந்து, ஓட்டோ கட்டணம் மாறாது!

கொழும்பு, டிசெ. 02

அரசாங்கத்தின் எரிபொருள் விலை திருத்தத்தின் பிரகாரம் முச்சக்கர வண்டி கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணங்கள் திருத்தப்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலையை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அரசாங்கம் திருத்தம் செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
02.12.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## யூதர்களின் பலவான் நண்பன் கோட்பாடு

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முன்னைநாள் செயலாளர், முன்னைநாள் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர், பனிப்போர் கால அமெரிக்க வெற்றியின் சொந்தக்காரராகப் போற்றப்படும் ஹென்றி கிசிங்கர் (Henry Kissinger) அவரது நூறாவது வயதில் காலமாகியிருக்கின்றார். அமெரிக்க அரசியல் வரலாற்றில் தனித்துவமான இராஜதந்திரியாக நோக்கப்படும் கிசிங்கர் 1970களில் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் இன்னொரு பெயராக அறியப்பட்டவர். அப்போதைய ஜனாதிபதி நிக்சனுக்கு அடுத்த படியான அதிகாரம் மிக்கவராக இருந்தவர்.

அமெரிக்க அரசியல் வரலாற்றில் ஜோன் எவ். கென்னடி காலத்திலிருந்து தற்போதைய ஜனாதிபதி பைடன் வரை 12 ஜனாதிபதிகளுக்கு ஆலோசனை வழங்கியவர். ஆனால், இவ்வாறான வரலாற்றைக் கொண்டிருக்கும் கிசிங்கர் அமெரிக்காவுக்குள் ஓர் அகதியாக அடைக்கலம் புகுந்தவர். நாசி ஜேர்மனியின் யூதர்களுக்கு எதிரான கொடுமைகளிலிருந்து தப்பியவர். தான் அடைக்கலம் தேடிய நாட்டின் நலன்களை பேணிப் பாதுகாப்பதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

ஜேர்மனியின் நாசி வதை முகாம்களிலிருந்து தப்பிய யூதர்கள் உலகெங்கும் சிதறி வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்கள். இவ்வாறானதொரு சூழலில் மீண்டெழ முயற்சித்த யூதர்கள் ஒரு விடயத்தில் உறுதியாக இருந்தனர். அதாவது, தாங்கள் ஒரு பலமான சமூகமாக எழுச்சியுற வேண்டுமாயின் அதற்கு ஒரு பலமான நண்பரின் ஆதரவு எப்போதும் கட்டாயமானது. தனித்து இவ்வுலகில் தாம் வாழ முடியாது. இந்த புரிதலின் அடிப்படையில் இரண்டாம் உலக மகா யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட உலக ஒழுங்கில் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை தழுவிக் கொண்டனர். தங்களின் ஆற்றலால் அமெரிக்க ஆளும் வர்க்கத்துக்குள் தவிர்க்கவே முடியாதவர்களாகத் தங்களை நிலைப்படுத்தினர். அமெரிக்க வெளிவிவகார கொள்கையில் யூத 'லொபி' என்று குறிப்பிடுமளவுக்கு அவர்களின் செல்வாக்கு இருக்கின்றது. இஸ்ரேலுக்கு ஒரு நெருக்கடி எனின், அங்கு அமெரிக்கா நிற்கும். அத்தோடு ஒட்டுமொத்த மேற்குலகமும் நிற்கும்.

உலக அரசியலைப் புரிந்து கொண்டு காலத்துக்கு ஏற்ப எடுக்க வேண்டிய தீர்மானத்தை சரியாக எடுத்து பலமான ஒரு நண்பரை வெற்றிகொண்டதன் காரணமாகவே யூதர்களால் இன்று நிமிர்ந்து நிற்க முடிகின்றது. ஈழத் தமிழ் சூழலிலும், யூத கனவு இருந்தது - ஆனால், கனவிருந்த அளவுக்கு உலக அரசியலை புரிந்து கொண்டு சரியான முடிவுகளை மேற்கொள்ளும் ஆற்றல் வெளிப்படவில்லை.

பனிப் போர் காலத்தில்தான் இலங்கை உள்விவகாரங்களில் இந்தியா நேரடியாக தலையீடு செய்தது. உண்மையில், அப்போது இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தவறான வெளிவிவகார கொள்கையின் விளைவாகவே இந்தியாவின் நேரடியான தலையீடு நிகழ்ந்தது. இந்தியாவின் அன்றைய இலங்கை தொடர்பான கொள்கையின் ஆணிவேராக ஈழத் தமிழர்களே இருந்தனர். ஆனால், அதனை கையாளுவதற்கு அப்போதிருந்த தலைமைகளால் இயலவில்லை. முக்கியமாக பிரபாகரன் - பாலசிங்கம் அணி பனிப் போர் காலத்தின் அரசியலை சரியாக புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படத் தவறியது. தேவையில்லாது இந்தியாவை விரோதித்துக் கொண்டது. இதன் விளைவாக ஈழத் தமிழ் சமூகம் ஒரு பலமான நண்பனை இழந்து போனது. இறுதியில் முக்கால் நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றை கொண்டிருந்த போதிலும் அரசியல் தீர்வு முயற்சியில் எவ்வித முன்னேற்றத்தையும் அடைய முடியாத கையறு நிலையில் இருக்கின்றது. இருப்பதையும் இழந்து - எஞ்சியிருப்பதையும் பாதுகாக்க முடியாதவர்களாக ஈழத் தமிழ் தலைமைகள் என்போர் இருக்கின்றனர்.

அருகிலிருக்கும் பலமான நாட்டை விரோதித்துக் கொண்டு தனிவழியில் செல்ல முற்பட்டதன் விளைவையே இன்றைய தமிழ் தலைமுறை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. யூதர்களின் பலமான நண்பன் கோட்பாட்டிலிருந்து ஈழத் தமிழர் அரசியல் சமூகம் பாடங்களை கற்றுக்கொள்ளவில்லை. இனியாவது கற்றுக்கொள்ள முயற்சித்தால் இருப்பதையாவது பாதுகாக்கலாம்.

# கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் யாழில் சந்திப்பு

*யாழ்ப்பாணம், டிசெ. 02*

*நாட்டிலுள்ள கடற்றொழில் மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.*

*வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களின் அழைப்பை ஏற்று கடலோர மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், கிராமிய அமைப்புகளின் தலைவர்கள் இணைந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இந்த கலந்துரையாடலை நடத்தினர். வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து பகுதிகளையும் இணைத்து ஒன்றுபட்டு எதிர்காலத்தில் ஒற்றுமையாக செயல்படுவதன் நோக்கமாகவே இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.*

*இந்த கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர், சமூக செயல்பாட்டாளர் செல்வின் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# பங்காரு அடிகளாரின் நினைவு தினத்தில் உதவி வழங்கலும் மாபெரும் அன்னதானமும்

*யாழ்ப்பாணம், டிசெ. 02*

*மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் சமாதி நிலை அடைந்த 45ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்னதானமும் உதவி தேவைப்படும் மாணவர்கள் 100 பேருக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.*

*இலங்கையின் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி, சமூகநல, பண்பாடு, அறப்பணி மையம் நடத்தும் இந்த நிகழ்வு நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சிறப்பு பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.*

*சுவிஸ் பேர்ன் மன்ற சக்திகள், லண்டன் ஈஸ்ற்ஹாம் மன்ற சக்திகளும் லண்டன் ஓம் சக்தி அம்மா காப்பகம், அவுஸ்திரேலியா குயின்ஸ்லாந்து சக்திகளின் நிதி அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்பு பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். (ஐ)*

# கருவி மாற்றுத் திறனாளிகள் நடத்திய போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம்!

*யாழ்ப்பாணம், டிசெ. 02*

*கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் டிசெம்பர் 3, சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் நோக்குடன் கட்டுரை, கவிதை, சிறுகதை, சித்திரப் போட்டிகளை நடத்தியிருந்தது.*

*பொதுமக்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தை திருமதி. சுதாமதி. தயாபரன் (சாவகச்சேரி), இரண்டாம் இடத்தை யோகராசா மோகதாசன் (மட்டக்களப்பு), மூன்றாம் இடத்தை தேவமலர் மோகதாசன் (மட்டக்களப்பு) ஆகியோரும் பெற்றுள்ளனர்.*


*கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தை ஜெயசக்தி பிரபாகரன் (யாழ்ப்பாணம்), இரண்டாம் இடத்தை மூத்ததம்பி மகாதேவன் (வாழைச்சேனை), மூன்றாம் இடத்தை பாரதி மைந்தன் (முல்லைத்தீவு) ஆகியோரும் சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தை திருமதி. சி.சிவகலை (கொழும்பு), இரண்டாம் இடத்தை புவித்திரா தேவராசா (வவுனியா), மூன்றாம் இடத்தை என். விஜயலட்சுமி (கல்கிசை) ஆகியோரும் ஓவியப் போட்டியில் முதலாம் இடத்தை கோ.மாதங்கி (இணுவில்), இரண்டாம் இடத்தை கு. தயாமினி (இணுவில்) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.*

*மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தை நிசோதா கருணாகரன் (யா.வேம்படி மகளீர் உயர்தரப் பாடசாலை), ஓவியப் போட்டியில் முதலாம் இடத்தை த. யுதீசன் (காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி, மட்டக்களப்பு ) இரண்டாம் இடத்தை ஹஜீதன் தயாபரன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) மூன்றாம் இடத்தை நிகிதா தயாபரன் (யாழ். கல்வயல் சிறீ சண்முகானந்தா வித்தியாலயம்) ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.*

*வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்தில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின்போது வழங்கப்படும் என்று கருவி மாற்றுத்திறனாளிகள் நிறுவனம் அறிவித்துள்ளது.*

*(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். முன் கோபம் குறையும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுபார்க்க வேண்டி வரும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**சிம்மம்**
வேலைச்சுமையால் சோர்வு அடைவீரர்கள். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்து போங்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**துலாம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள்.

**மகரம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**மீனம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபார ரீதியாக சில முக்கிய ஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும்.

# முதல்வரும் ஆளுநரும் பேச்சு நடத்த வேண்டும்!

## உயர்நீதிமன்றம் கருத்து

புதுடில்லி, டிசெ. 02

**தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை ஆளுநர் கிடப்பில் வைத்திருப்பது தொடர்பாக மாநில அரசு தொடர்ந்த வழக்கில் முதல்வர் - ஆளுநர் அமர்ந்து பேச வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.**

சட்ட பிரேரணைகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் தாமதம் செய்வது தொடர்பாக தமிழக ஆளுநர் ஆர். என்.ரவிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை நேற்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப் பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் ஆளுநர் தரப்பில் குழப்பம் உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்து, அடுக்கடுக்கான கேள்விகளையும் எழுப்பியிருந்தது.

தொடர்ந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, ஆளுநர் - முதல்வர் இடையே பல்வேறு விவகாரங்களுக்கு தீர்வு காண வேண்டி உள்ளது. பேச்சு நடத்த முதல்வருக்கு ஆளுநர் அழைப்பு விடுப்பதுதான் சரியாக இருக்கும். முதல்வருடன் ஆளுநர் அமர்ந்து பேசி தீர்வு கண்டால் வரவேற்போம்.

சட்டத்தை செயலிழக்க செய்யவோ முடக்கவோ ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. முதல்வருடன் ஆளுநர் அமர்ந்து பேசி பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2000 கிலோ பீடி இலைகள் பறிமுதல்

தூத்துக்குடி, டிசெ. 02

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2 ஆயிரம் கிலோ பீடி இலைகளை தூத்துக்குடி பொலிஸார் கைப்பற்றியதுடன், ஒருவரை கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி தாளமுத்துநகர் கடற்கரை வழியாக இலங்கைக்கு பீடி இலைகள் கடத்தப்படுவதாக கடலோர காவல்படை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து தூத்துக்குடி கடலோர பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, மினி வான் ஒன்றை சோதனையிட்டபோது, அதில் 40 மூட்டைகளில் 1,200 கிலோ பீடி இலைகள் இருப்பதும், இது சட்ட விரோதமாக இலங்கைக்கு கடத்த முயன்றதும் தெரியவந்தது.

இதையடுத்து வானை ஓட்டி வந்தவர் கைது செய்யப்பட்டார்.

(ஐ)

# இந்தியா கூட்டணி பிரதமர் வேட்பாளர் யார்? 5 மாநில தேர்தல் முடிவின் பின்னர் முடிவு!

புதுடில்லி, டிசெ. 02

'இந்தியா' கூட்டணி பிரதமர் வேட்பாளர் குறித்து 5 மாநில தேர்தல் முடிவுக்கு பின் தலைவர்கள் கூடி முடிவு செய்வார்கள் என்று கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற பின்னர் கனிமொழி எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

மத்திய பா. ஜ. க. அரசு வருமான வரித் துறை, சி. பி. ஐ., வருவாய் துறை ஆகிய மூன்றையும் தன்னை எதிர்க்கக் கூடியவர்கள் மீது பயன்படுத்துகிறது. தி. மு. க-வை மிரட்டி விடலாம் என்ற எண்ணத்தில் பா. ஜ. கவினர் செயல்படுகிறார்கள்.

5 மாநில தேர்தல் முடிவுகள் 'இந்தியா' கூட்டணிக்கும் நாட்டுக்கும் நம்பிக்கையை தரக்கூடிய முடிவாக அமையும். 'இந்தியா' கூட்டணி பிரதமர் வேட்பாளர் குறித்து 5 மாநில தேர்தல் முடிவுக்கு பின் தலைவர்கள் கூடி முடிவு செய்வார்கள் - என்றார்.

(ஐ)

# ஐந்து மாநில தேர்தலில் மோடி பாடம் படிப்பார்!

## காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர்

சென்னை, டிசெ. 02

ஐந்து மாநிலங்களின் தேர்தல் முடிவில் பிரதமர் நரேந்திர மோடி பாடம் படிப்பார் என்று காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மேற்கொண்டு வருகிற செயற்கையான நடைபயணத்தில் அடிப்படை ஆதாரமில்லாமல் கூறுகிற கருத்துகளை தெளிவுபடுத்து வேண்டியது அவசியமாகிறது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியோடு வளர்ச்சியை ஒப்பிடுகிற அண்ணாமலைக்கு ஒரு கேள்வி ? மே 2014 இல் டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 58.62 ஆக இருந்தது. 2023 இல் ரூபாய் 82.71 ஆக சரிந்து 40 சதவிகித மதிப்பு குறைந்துள்ளது. 2014 இல் வங்கியில் ரூபாய் 100 டெபாசிட் செய்திருந்தால் இன்றைய மதிப்பு ரூபாய் 60 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் மக்கள் அடைந்த பாதிப்பை அண்ணாமலையால் அறிய முடியுமா ? தி.மு.க. ஆட்சியில் மணல் விற்பனையில் ரூபாய் 4700 கோடி ஊழல் செய்துள்ளதாக அமுலாக்கத்துறை நீதிமன்றத்தில் கூறியதாக அண்ணாமலை சொல்கிறார்.

அமுலாக்கத்துறை இப்படி கூறுவதற்கு என்ன ஆதாரம்? அரசியல் உள்நோக்கம் கொண்டு அமுலாக்கத்துறை செயல்படுவதால்தான் மணல் குவாரி குறித்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடம் விசாரிக்க சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது. இன்றைக்கு பா.ஜ.க.வோடு கூட்டணி சேர எந்த கட்சியும் முன்வராத நிலையில் பிரதமர் மோடி அமுலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமான வரித்துறை, எதிர்க்கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களின் ஆளுநர்கள் என கூட்டணி வைத்து செயல்பட்டு வருகிறார்.

இதன்மூலம் பொதுமக்கள் மற்றும் எதிர்கட்சிகளின் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியிருக்கிறார். இதற்கான பாடத்தை ஐந்து மாநில தேர்தலில் மோடி பெறப் போகிறார். இதற்கு பிறகும் இந்தியா வளர்ச்சி அடைந்திருக்கிறது என்று கூறினால் அத்தகைய வளர்ச்சி அம்பானி, அதானி உள்ளிட்ட சில தொழிலதிபர்களுக்குதானே தவிர, 140 கோடி இந்தியர்களுக்கு அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# 2024 இலங்கையிலும் தேர்தல் நடைபெறும்

## பிரிட்டன் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 02

**2024 ஆம் ஆண்டில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான் மற்றும் மாலைதீவுகள் தேர்தலுக்கு தயாராகின்ற நிலையில் இலங்கையும் அதில் உள்ளதாக பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

தெற்காசிய நாடுகளின் தேர்தல்கள் குறித்து பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, பதிலளிக்கும் போதே வெளிவிவகார அமைச்சர் அன்னே-மேரி ட்ரெவெலியன் இதனை தெரிவித்தார்.

அனைத்து மக்களின் நலன்கள் மற்றும் ஒவ்வொரு தேசத்தின் நீண்ட கால ஸ்திரத்தன்மைக்காக பிரித்தானிய தொடர்ந்தும் செயற்படும் என்றும் அவர் கூறினார்.

தெற்காசிய நாடுகளுடனான கலந்துரையாடலின்போது சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலின் முக்கியத்துவத்தை தாம் தொடர்ந்தும் வலியுறுத்துவதாக வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் சிவில் சமூகம், ஊடகங்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் மீதான அச்சுறுத்தல் மற்றும் அடக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (அ)

## மதுபானசாலை திறந்திருக்கும் நேரத்தை அதிகரிக்க அரசாங்கம் தீவிர ஆலோசனை

கொழும்பு, டிசெ. 02

இலங்கையில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் எடுத்துவரும் பல வேறு முயற்சிகளில் ஒரு தீர்மானமாக மதுபானச்சாலைகள் திறந்திருக்கும் நேரத்தை அதிகரிக்க அரசாங்கம் ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

இலங்கையில் தற்போது காலை 9 மணிமுதல் இரவு 9 மணிவரை மதுபானச்சாலைகள் திறக்கப்படுகிறது.

இந்நிலையில், இராஜாங்க அமைச்சர் டயான கமகே முதல் அரசாங்கத்தின் முக்கிய நபர்கள் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் இரவு சுற்றுலாவை அபிவிருத்தி செய்ய மதுபானச்சாலைகளை இரவில் அதிக நேரம் திறந்துவைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

என்றாலும், இந்தக் கோரிக்கைக்கு கடுமையான எதிர்ப்புகளும் கடந்த காலத்தில் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், நேற்று இடம்பெற்ற கலால் திணைக்கள பரிசோதகர்களின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, மதுபானச்சாலைகள் திறக்கப்படும் நேரத்தை அதிகரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக கூறினார்.

இரவு ஒன்பது மணிமுதல் மேலும் பல மணிநேரம் மதுபானச்சாலைகள் திறந்துவைக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

## நுண்கடனினால் பெண்கள் பலர் பாலியல் லஞ்சம் வழங்கும் நிலை

### சபையில் குறிப்பிட்டார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, டிசெ. 02

கிராமப்புறங்களில் பெண்களை வீட்டுத் தலைவியாகக் கொண்ட பெரும்பாலான குடும்பங்கள் முறைசாரா நுண்நிதி கடன் நிறுவனங்களிடம் சிக்கிக்கொண்டுள்ளன. இந்தக் கடனை அடைக்க முடியாதபோது பாலியல் இலஞ்சம் பெறும் நிலைக்கு ஆளாகுவதாக ஆய்வுகளின் மூலம் தெரிய வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆய்வுகளின் பிரகாரம் கிராமப்புற மக்களில் பெண்களை வீட்டுத் தலைவியாகக் கொண்ட பெரும்பாலான குடும்பங்கள் முறைசாரா நுண்நிதி கடன்களுடன் தொடர்புடைய கடன் சுமை காரணமாக காதணிகளைக் கூட அடகு வைத்து வருகின்றனர்.

நாட்டில் தற்போது 11,000 நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் சட்டவிரோதமாக இயங்கி வருகின்றன. கிராமங்களில் 'படுக்கைக் கடன்' என்று அழைக்கப்படும் இந்தக் கடனை அடைக்க முடியாதபோது, பாலியல் இலஞ்சம் பெறும் நிலை காணப்படுகிறது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் தெரிவித்துள்ளதன் பிரகாரம்,கடந்த மாதம் 15 வயதுக்குட்பட்ட 169 சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதோடு,அதில் 26 சிறுவர்கள் கர்ப்பமடைந்துள்ளனர்.

அத்துடன் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கான பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகங்கள் தடுப்பு பணியகத்தின் அறிக்கையின் படி, கடந்த 9 மாதங்களில் 12 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# உரிய வடிகால்கள் இல்லாது வீதிகளில் பாயும் வெள்ளநீர்!

## பாடசாலை செல்லமுடியாது தவிக்கும் மந்துவில் கிராம மாணவர்கள்

முல்லைத்தீவு, டிசெ. 02

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மந்துவில் கிராமத்தில் அமைந்துள்ள மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பாடசாலையைச் சூழ உள்ள கிராமத்தின் மாணவர்கள் பாடசாலை செல்வதற்கான வீதிகள் அனைத்திலும் வெள்ளநீர் பாய்வதால் அவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த



மந்துவில் கிராமத்தினுடைய வீதிகளில் உரிய வடிகால் அமைப்புகள் இல்லாமையாலும் மீள் குடியேற்றத்தின் பின்னர் சுமார் 14 ஆண்டுகளாக இன்று வரை எந்த திருத்த பணிகளும் மேற்கொள்ளாமல் இருக்கின்ற நிலைமையிலும் வடிகால்களில் ஓடவேண்டிய நீர் பிரதான பாதைகள் ஊடாகவே ஓடி வருகின்றது.

எனவே பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்கள் முதல் வயோதிபர்கள், மாற்றுத்திறனாளிகள் என பலரும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே பிரதேச சபையினர் மிக விரைவாக குறித்த பகுதியில் உரிய வடிகால்களை சீரமைத்து பாடசாலை மாணவர்கள் பாடசாலை சென்று வருவதற்கும் பொது மக்களின் போக்குவரத்துக்கும் ஏற்ற வசதிகளை செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அம்புலன்ஸ் சேவையாளர்கள் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கவேண்டும்

## ஹர்ஷ டி சில்வா சபையில் கோரிக்கை



கொழும்பு, டிசெ. 02

சுவ செரிய இலவச அம்புலன்ஸ் சேவையை விமர்சித்தவர்களுக்கு மன்னிப்பு வழங்குகிறேன். இந்த சேவையில் உள்ளவர்கள் 24 மணித்தியாலங்களும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகிறார்கள். ஆகவே அவர்களுக்கான கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் அடிப்படையில் சுவ செரிய இலவச அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.இந்த சேவை ஆரம்பிக்கப்பட்ட போது பலர் தவறான விமர்சனங்களை முன்வைத்தார்கள், எதிர்ப்பு தெரிவித்தார்கள். அவர்களுக்கு நான் மன்னிப்பு வழங்குகிறேன். இந்த சேவை தோல்வி என்று எவராலும் குறிப்பிட முடியாது.

சுவசெரிய அம்புலன்ஸ் சேவைக்கு ஒரு நாளைக்கு மாத்திரம் 5300 தொலைபேசி அழைப்புகள் கிடைக்கப்பெறுகின்றன.முதல் அழைப்பிலேயே பொது மக்களுக்கு சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.சுவ செரிய அம்புலன்ஸுக்குள் 684 பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன.

சுவசெரிய அம்புலன்ஸ் சேவையில் உள்ள அம்புலன்ஸ் வண்டிகள் ஒரு நாளைக்கு மாத்திரம் 24,692 கிலோமீற்றர் தூரம் பயணிக்கின்றன.நகர புறங்கள் உட்பட கிராம புறங்களிலும் இந்த சேவை வினைத்திறனான முறையில் முன்னெடுக்கப்படுகிறது.

1461 சேவையாளர்களுக்கான கேள்வி காணப்படுகின்ற நிலையில் 1210 பேர் மாத்திரமே தற்போது சேவையில் உள்ளார்கள்.

ஆகவே காணப்படும் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.சுவ செரிய சேவைத்திட்டத்தின் சேவையாளர்கள் 24 மணித்தியாலங்களும் அர்ப்பணிப்புடன் சேவையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்-என்றார். (அ)

# இறந்தோரை நினைவு கூரமுடியாது உள்ளனர் நாட்டின் ஒரு பகுதி மக்கள்

## பவானி பொன்சேகா சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 02

**ஜனநாயகம் சட்டத்தின் ஆட்சி குறித்து பேசுகின்றோம் ஆனால் சில நாட்களுக்கு முன்னர் இந்த நாட்டின் மக்கள் உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவுகூர முயன்றார்கள் - வடக்குகிழக்கில் - ஆனால் அவர்களால் அது முடியவில்லை என மனித உரிமை சட்டத்தரணி பவானி பொன்சேகா தெரிவித்துள்ளார்**



தொலைக்காட்சி நிகழ்வொன்றில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயகம் சட்டத்தின் ஆட்சி குறித்து பேசுகின்றோம். இந்த நிகழ்ச்சி கவனம் செலுத்தும் விடயமாக இதுவே உள்ளது.

ஆனால் சில நாட்களுக்கு முன்னர் இந்த நாட்டின் மக்கள் உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவுகூர முயன்றார்கள். ஆனால் அவர்களால் அது முடியவில்லை.

மக்களால் உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவு கூரமுடியவில்லை என்றால் அதுவும் இந்த நாட்டில் ஒரு விவகாரம் தான்.

இந்த நாட்டில் அனைவரும் சமமானவர்களா? யார் இந்த மக்களுக்காக குரல் கொடுக்கின்றனர்.

ஆகவே நான் என்ன சொல்கின்றேன் என்றால் ஊழல் குறித்து நாங்கள் கவனம் செலுத்தவேண்டும். ஆட்சி குறித்து நாங்கள் பேசவேண்டும். நாங்கள் மனித உரிமைகள் குறித்து பேசவேண்டும். நாங்கள் சட்டத்தின் ஆட்சி குறித்து பேசவேண்டும். நாங்கள் நல்லிணக்கம் குறித்தும் பேசவேண்டும்.

சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் என நாங்கள் பேசுகின்றோம். யுத்தம் முடிவடைந்து அடுத்தவருடத்துடன் 15 வருடங்களாகின்றன. மோதலிற்கான அடிப்படை காரணங்களுக்கு தீர்வை கண்டுள்ளோமா?-என்றார். (அ)

# முட்டை வாங்கச் சென்ற மாணவன் விபத்தில் பலி!

கொழும்பு, டிசெ. 02

முட்டை வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்த பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கலகெடிஹேன ஹல்கம்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளதாக வெயங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் மோட்டார் சைக்கிளில் வீட்டிலிருந்து கலகெடிஹேன சந்தி நோக்கி பயணித்த போது மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் குறினர்.

அளுத்கம அனுர மத்திய மஹா வித்தியாலயத்தில் 11ஆம் ஆண்டில் கல்வி கற்கும் திலன் மாதவ ரத்னவீர என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (அ)

# சூரிய உதயத்தை காணும் வாய்ப்பினால் நாளாந்தம் மூவாயிரம் அமெரிக்க டொலர்!

கொழும்பு, டிசெ. 02

சிகிரியாவில் இருந்து சூரிய உதயத்தின் அழகை வெளிநாட்டவர்கள் காணும் வாய்ப்பை வழங்கியிருப்பதன் மூலம் நாளாந்தம் சுமார் மூவாயிரம் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்படுவதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில், முன்னிலையாகி அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கடன் சுமையில் இருந்த மத்திய கலாசார நிதியத்தின் டொலர் ஈட்டும் பெறுமதி, தற்பொழுது 614 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

# தேசிய தேர்தல்களை விரைந்து நடத்துங்கள்

## ரணிலிடம் வலியுறுத்திய சந்திரிகா

கொழும்பு, டிசெ. 02

"மக்கள் ஆணையுள்ள பலமிக்க தலைவரையும், அரசையும் நாட்டு மக்கள் மாத்திரமல்லர் சர்வதேசம் கூட விரும்புகின்றது. எனவே, தேசிய தேர்தல்களை விரைந்து நடத்த வேண்டிய கட்டாயத்துக்குள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வந்துள்ளார்."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் நடைபெறும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் வெவ்வேறு இடங்களில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ஆனால், அவர்கள் எந்த மாதம் தேர்தல் நடைபெறும் என்று உறுதியாகக் கூறவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு அதற்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அந்தத் தேர்தல் இன்னமும் நடைபெறாமல் இருக்கின்றது. அந்த நிலைதான் ஜனாதிபதித் தேர்தலுக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கும் நடக்குமா என்ற ஐயம் எழுந்துள்ளது.

எனவே, வாயால் மாத்திரம் வாக்குறுதிகளை வழங்காமல் தேசிய தேர்தல்களை ஜனாதிபதி விரைந்து நடத்த வேண்டும் -என்றார். (அ)

# சீஷெல்ஸ் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இலங்கையர் நியமனம்

கொழும்பு, டிசெ. 02

சீஷெல்ஸ் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இலங்கை நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக சீசெல்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீஷெல்ஸ் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு புதிய குடியுரிமை இல்லாத நீதிபதிகள் கடந்த புதன்கிழமை காலை சீஷெல்ஸின் துணைத் தலைவர் அஹ்மத் அஃபிஃப் முன்னிலையில் பதவியேற்றனர்.

இரண்டு நீதிபதிகளும் அண்டை நாடுகளிலிருந்து வந்தவர்கள் எனவும், மொரிஷியஸைச் சேர்ந்த கருணா குணேஷ் -பாலகி மற்றும் இலங்கையைச் சேர்ந்த ஜனக் டி சில்வா ஆகியோர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.



"நான் இங்கு இருப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு நீதித்துறை அதிகாரிகளுடன் பணியாற்றுவதற்கும், எனது நாட்டிற்கு வெளியே வித்தியாசமான அனுபவத்தைப் பெறுவதற்கும் இது ஒரு வாய்ப்பாக நான் பார்க்கிறேன்" என்று பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் நீதிபதி ஜனக் டி சில்வா கூறினார்.

ஜனக் டி சில்வா இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஆவார். அவர் இலங்கையின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசராகவும் பதவி வகித்துள்ளார்.

சீஷெல்ஸ் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் தலைமை நீதிபதி உட்பட ஐந்து மேல்முறையீட்டு நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒவ்வொரு ஆண்டும் மூன்று முறை அமர்கிறது. இவை உயர் நீதிமன்றத்தின் விடுமுறையின் போது மற்றும் பொதுவாக ஏப்ரல், ஓகஸ்ட் மற்றும் டிசெம்பர் மாதங்களில் இருக்கும். (அ)

# வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்களை மீண்டும் பணிக்கமர்த்த அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 02

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்களை அவர்கள் பணிபுரிந்த ஸ்தலத்திலேயே பணிக்கமர்த்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவைப் பாத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இதன்படி, மேன்முறையீடு செய்த அனைத்து அரச ஊழியர்களும் பணிக்கமர்த்தப்படுவதற்கு தகுதியுடையவர்கள் என அவர் குறிப்பிட்டார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலே இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர இந்த விடயத்தை தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுமார் 3000 அரச ஊழியர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ள நிலையில், அவர்களின் மேன்முறையீடு மனுக்களை பரிசீலித்து மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கு அமைச்சரவை பாத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை அனுமதி கிடைத்ததன் பின்னர் ஒரு மாதத்திற்குள் குறித்த பணியாளர்கள் பணிக்கமர்த்தப்படவுள்ளதாக அவர் கூறினார்.

இவ்வாறு பணிக்கமர்த்தப்படும் ஊழியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணிக்கமர்த்தப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார். (அ)

# அம்புலுவாவ மலை உச்சியை அடைய கேபிள் கார் திட்டம்!

கொழும்பு, டிசெ. 02

அம்புலுவாவ மலை உச்சியை அடைவதற்காக பல்கலாச்சார பல்லுயிர் வளாக கேபிள் கார் திட்டத்தை தொடங்குவதற்கு இலங்கை முதலீட்டுச் சபை எம்பர் அட்வென்ச்சர்ஸ் மற்றும் சீன நஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் மெக்கானிக்ஸ் ஆகியவற்றுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

அம்புலுவாவ பல்கலாச்சார மையம், எம்பர் அட்வென்ச்சர்ஸ் இலங்கை நிறுவனம் மற்றும் சீன முதலீட்டாளர்கள் பங்கு உரிமையுடன் இந்த முதலீட்டை மேற்கொள்வதாகவும், முதலீட்டின் பெறுமதி 4.5 மில்லியன் டொலர்கள் எனவும் இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

கேபிள் கார்களுக்கு மூன்று நுழைவு மற்றும் வெளியேறும் புள்ளிகள் உள்ளன மற்றும் இருப்பு முழுவதும் 1.5 கிமீ நீளமுள்ள கேபிள் அமைப்பு திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய கேபிள் கார் அனுபவம் பயணிகளை சுற்றியுள்ள மலைகள், காடுகள், ஆறுகள் மற்றும் நகரங்களின் 360 டிகிரி காட்சிகளை அனுபவிக்க அனுமதிக்கிறது.

இலங்கையில் முதன்முறையாக கேபிள் கார் திட்டம் தொடங்கப்பட்டு, பல்லுயிர் பெருக்கம் நிறைந்த பகுதியில் 80 தாவர குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 200 வகையான தாவரங்கள், பசுமையான காடுகள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் காடு விதானம், பல்வேறு மருத்துவ தாவரங்கள் என முதலீடு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எதிரணியின் பொது வேட்பாளர் சஜித் என்பதில் மாற்றம் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 02

**முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறக்கமாட்டோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.**



ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

"ரொஷான் ரணசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவரை பொது அணியின் வேட்பாளராக களமிறக்க மாட்டோம்.

சஜித் பிரேமதாஸவை பொது எதிரணி வேட்பாளராக நிறுத்தும் முடிவை நாங்கள் மாற்ற மாட்டோம்.

ஜனாதிபதி பதவிக்கு வெளியாட்களை போட்டியிட வைக்கும் கொள்கை ஐக்கிய மக்கள் சக்தியிடம் இல்லை.

அத்துடன் அரசியலமைப்பில் தேவையான திருத்தங்களைச் செய்து ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்கள் இரண்டையும் ஒரே நாளில் நடத்த வேண்டும்" என தெரிவித்தார்.

கடந்த வருடம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினர் விடுத்த கோரிக்கைக்கு சஜித் பிரேமதாஸ செவிசாய்த்ததாகவும், அழகப்பெருமவுக்கு ஆதரவளிக்குமாறு ஏனைய எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை ஏற்றமையினாலேயே போட்டியிடவில்லை.

இதேவேளை அப்போதைய சூழலில் ஜனாதிபதியாக வருவதற்கு அவருக்கு சபையில் போதிய வாக்குகள் இல்லை" எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# மண் மேடு சரிந்ததில் ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, டிசெ. 02

தியத்தலாவ மற்றும் ஹப்புத்தளை ரயில் நிலையங்களுக்கு இடையில் மண் மேடு சரிந்து வீழ்ந்தமையினால் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று காலை 06.00 மணியளவில் குறித்த மண்மேடு சரிந்து வீழ்ந்ததாகவும் இதனால் மலையக ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நண்பகலுக்கு முன் குறித்த ரயில் சேவை வழமைக்கு திரும்புவதற்காக துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது. (அ)

# யாழ். மத்திய பஸ் நிலையத்தில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் கேரள கஞ்சாவுடன் இளைஞரொருவர் நேற்று முன் தினம் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரும் மீட்கப்பட்ட ஒரு கிலோ 480 கிராம் கேரள கஞ்சாவும் யாழ்.பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினரால் கையளிக்கப்பட்டது.

மேலும் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். (அ)

# ரணிலின் சூழ்ச்சி வெற்றி பெற எவருமே இடமளிக்கக்கூடாது!

## சபையில் விஜித ஹேரத் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 02

தேர்தல்களை ஒத்திவைக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சூழ்ச்சிகள் வெற்றி பெற எவரும் இடமளிக்கக் கூடாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் வலியுறுத்தினார்.



காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அரச இயந்திரத்தில் அரச சேவையாளர்கள் முக்கியமானவர்களாக உள்ளார்கள். தற்போதைய நிலையில் அரச சேவையாளர்களால் வாழ முடியாத நிலை காணப்படுகின்றது.

கடந்த ஆண்டை காட்டிலும் தற்போது வாழ்க்கை செலவுகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. ஆனால், வருமானம் ஒரு சதத்தில் கூட உயர்வடையவில்லை.

வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம் என்று அரசு குறிப்பிடுகின்றது. ஆனால், நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பம் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஒரு மாதத்துக்கு 74 ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டியுள்ளது எனப் புள்ளிவிபரவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது. 75 ஆயிரம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் எத்தனை அரச சேவையாளர்கள் உள்ளனர்?

ஒரு பட்டதாரி அரச சேவையாளரின் அடிப்படைச் சம்பளம் 31 ஆயிரம் ரூபாவாக உள்ளது. அரசின் புதிய வரி விதிப்பு அரச சேவையாளர்களுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களுக்களும் பாதிக்கப்படுவார்கள்.

அரச சேவையாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்க ஒரு மாதத்துக்கு 133 பில்லியன் ரூபாவை செலவழித்து விட்டு, அரச சேவையாளர்கள் உட்பட ஒட்டுமொத்த சேவை தரப்பினரிடமிருந்து மாதாந்தம் 1094 பில்லியன் ரூபாவை வரி வருமானம் ஊடாகப் பெற அரசு தீர்மானித்துள்ளது.

நான்கு பேர் உள்ள குடும்பத்துக்கு 74 ஆயிரம் ரூபா ஒரு மாதத்துக்கு தேவை என்று குறிப்பிடுகின்ற நிலையில் 10 ஆயிரம் ரூபா குறைந்தபட்ச கொடுப்பனவு ஒருபோதும் சாதகமாக அமையாது என்பதால் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அரச சேவையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றார்கள். இந்தக் கோரிக்கைக்கு அரசு கவனம் செலுத்தவில்லை- என்றார். (அ)

# கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் பணி அடுத்த வாரம் முதல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 02

நாடளாவிய ரீதியில் சேதமடைந்துள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி சுமார் 20 பில்லியன் ரூபா கடனுதவி வழங்க இணங்கியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், உரிய கடன் தொகை கிடைத்த பின்னர் வீதிப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்பட சர்வதேச நிபுணத்துவத்துவமுடைய பிரான்ஸ் நாட்டு லாசார்ட் நிறுவனமும், சர்வதேச கடன்களை செலுத்தாததால் ஏற்பட்டுள்ள சட்ட விடயங்களுக்கு கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கடன் வழங்குனர்களுடன் அவர்கள் விரிவாக கலந்துரையாடினர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது உத்தியோக பூர்வ வெளிநாட்டு விஜயங்களின் போது ஜப்பான், இந்தியா மற்றும் சீனாவின் ஆதரவைக் கோரினார்.

தற்போது இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டை மேற்கொள்ள சர்வதேச சமூகம் உத்தியோகபூர்வமாக இணங்கியுள்ளது. அது ஒரு நாடாக நாம் பெற்ற வெற்றியாகும். நாடு மீண்டும் சுவாசிக்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த வெற்றியின் மூலம் நாடளாவிய ரீதியில் நிறுத்தப்பட்டிருந்த திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும்.

ஒரு சில வீதிகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்துள்ளன. மேம்பாலங்கள் அமைக்கும் பணி இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, இவ்வாறு நிறுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களும் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் சுமார் 20 பில்லியன் ரூபா கடன் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் கடன் தொகை மூலம் நாடு முழுவதும் கிராமப்புறங்களில் உள்ள சேதமடைந்த மற்றும் பயணிக்க முடியாத வீதிகளை புனரமைப்பதற்காக பயன்படுத்தப்பட உள்ளது.

அந்த வீதிகள் குறித்து ஆராயுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். அதன்படி, அடுத்த வாரத்திற்குள் வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

ரயில் பாதைகள், அதிவேகப் பாதைகள் குறித்து பலரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். செயற்திறன் மிக்க ரயில் பாதைகளாக மாற்ற, ரயில் தண்டவாளங்களை நவீனமயப்படுத்த வேண்டும்.

நான் இந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்கும்போது இந்திய கடன் திட்டத்தின் கீழ் 160 ரயில் பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இந்த ரயில் பெட்டிகளுக்கான துறைமுக அபராதத் தொகையை செலுத்திய பின்னர், 123 புகையிரதப் பெட்டிகளை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது- என்றார். (அ)

# மகளை வன்புணர்ந்த தந்தைக்கு 12 வருட கடூழிய சிறை

வவுனியா, டிசெ. 02

தான் பெற்ற மகளையே வன்புணர்ந்த தந்தைக்கு 12 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சந்தேகநபரை நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா - சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த தந்தைக்கே இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தாய் வெளிநாடு சென்ற நிலையில் 14 வயதான மகள் தந்தையுடன் வாழ்ந்து வந்துள்ளார். கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது மகளை தந்தை மூன்று முறை வன்புணர்விற்கு உட்படுத்தியுள்ளார்.

14 வயது மகளான சிறுமி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தபோது கர்ப்பமாக இருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமிக்கு ஆண் குழந்தை பிறந்ததையடுத்து மரபணு பரிசோதனையின்போது சிறுமியின் தந்தையே பிறந்த குழந்தைக்கு தந்தையென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த நபருக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறை, ரூபாய் 30,000 தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளதோடு, கட்டத் தவறும் பட்சத்தில் 3 மாத கால கடூழிய சிறை மற்றும் ரூபாய் 6 இலட்சம் நட்ட ஈடும், அதனை கட்டத்தவறும் பட்சத்தில் 18 மாத கால கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். (அ)

ஈழநாடு



# அம்பாறையில் அடைமழை!

## எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடு!!





காரைதீவு, டிசெ. 02

**அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக அடைமழை பெய்து வருகிறது.**

**பெரும்பாலான வயல் வெளிகள் வெள்ளக் காடாக காட்சிளிக்கிறது.**

வீதியெங்கும் வெள்ளம் தேங்கி நிற்கிறது. காரைதீவு பிரதேசத்தில் வயல் நிலங்கள் பூரணமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

தாழ் நிலங்களில் குடியிருப்பவர்களின் நலன் கருதி அடைபட்டுள்ள தோணாக்களை துப்பரவு செய்யும் பணிகள் உள்ளூராட்சி சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாழ் நிலங்களில் அதிகம் மழை நீர் தேங்கி நிற்பதால் மக்களின் நாளாந்த வாழ்விய லில் அசௌகரியம் ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து இடம் பெயர வைத்துள்ளது.

கூடவே பிள்ளைகளின் கல்வியும் குடும்பங்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது.

வயல் கடற்றொழிலுக்கு பொதுவாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

காரைதீவு பிரதேசத்தில் மழை நீர் தேங்கி நிற்காமலும் நுளம்புகள் பெருகாமலும் தோணாக்கள் கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர் கடலுக்குச் சென்றடையும் வகையில் சுத்தம் செய்யப்படுகிறது. (அ)

# விழிப்புணர்வூட்டும் சைக்கிளோட்டம்

அம்பாறை, டிசெ. 02

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் வழிகாட்டலிலும், கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.என். எம். தில்ஷான் ஒருங்கிணைப்பிலும், நிந்தவூர் ஆதார வைத்திய சாலை ஏற்பாடு செய்திருந்த "உலக எயிட்ஸ் தின விழிப்புணர்வூட்டல் சைக்கிளோட்டம்", வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.பி. அப்துல் வாஜித் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இச் சைக்கிளோட்டத்தில் நிந்தவூர் லிவிங் வெல் அமைப்பின் சைக்கிளோட்ட வீரர்கள் பிரதானமாக பங்குபற்றியதோடு, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் நிந்தவூர் ஆயுள்வேத வைத்திய சாலை என்பனவும் பங்குபற்றின. இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு விசேட விழிப்புணர்வு வழங்கப்பட்டது. (அ)








# பொத்துவில் பிரதேச மாணவர் மத்தியில் நுகர்வோர் அதிகார சபை விழிப்புணர்வு

அம்பாறை, டிசெ. 02

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொத்துவில் மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்கவேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரி திரு. இஷட் எம் ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி திரு.எம்.எச்.எம் றிபாஜ் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள். (அ)

# கல்முனை பகுதியில் கடலரிப்பு ஆரம்பம்!

## கடலரிப்பை கட்டுப்படுத்த ஹரீஸ் எம்.பி நடவடிக்கை

கல்முனை, டிசெ. 02

கல்முனை தொகுதியில் சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை தொடர்ந்து இப்போது கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பு ஆரம்பித்துள்ளது. கலரிப்பின் பாதிப்பு நிலை தொடர்பில் மீனவ அமைப்புக்கள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களின் போது இது சம்பந்தமாகவும் ஜனாதிபதி செயலாளர், அரச உயர்மட்டங்கள், குறித்த இலாகாவுக்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் எடுத்துக் கூறியிருந்ததன் பயனாக கரையோரம் பேணல் திணைக்கள கிழக்கு மாகாண பொறியியலாளர் எம்.துளசிதாசனை தொடர்புகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் முன்வைத்த வேண்டுகோளின் பிரகாரம் கல்முனைக்கு நேற்று முன் தினம் களவிஜயம் மேற்கொண்ட மாகாண பொறியியலாளர் எம். துளசிதாசன், கரையோரம் பேணல் திணைக்கள கல்முனை பிரதேச செயலகத்திற்கான அதிகாரி எம்.எச். மப்ரூக், அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திரப் படகு மீன்பிடி உரிமையாளர் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எம்.எஸ். அப்துல் ஹமீட் (நஸீர்), மீனவர் சங்க பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியது டன் இவ்வேலைத்திட்டம் முன்னெடுப்பது சம்பந்தமான மதிப்பீட்டறிக்கையை விரைவாக செய்து இவ் வேலைத்திட்டத்தை அவசரமாக முன்னெடுக்க தயாராக உள்ளதாக தெரிவித்தார்.



இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுக்க தேவையான நிதியை பெறுவது தொடர்பில் வரவு செலவு திட்டத்திற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொத்துவிலில் மதுபானசாலை அமைவதை எதிர்க்கிறார் ஹரீஸ்

அம்பாறை, டிசெ. 02

முஸ்லிங்களை பெரும்பான்மையாக கொண்ட பொத்துவில் 11, வட்டிவெளி பிரதான வீதியில் (பொத்துவில் பொலிஸ் நிலையம் அருகில்) வர்த்தகர் ஒருவரினால் அமைக்கப்படவிருந்த மதுபானசாலையை தடுத்து நிறுத்துமாறு பொத்துவில் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸுக்கு இந்த மதுபானச்சாலையை நிறுவுவதை தடுக்குமாறு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய கடந்த செப்ரெம்பர் 19 அன்று நிதி இராஜாங்க அமைச்சருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் மக்களின் எதிர்ப்பையும், குறித்த மதுபானச்சாலை அமைந்தால் உருவாக உள்ள பிரச்னைகளையும் தெளிவுபடுத்தியிருந்தார்.

மேலும் நிதி இராஜாங்க அமைச்சர் இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு குறித்த மதுபானச்சாலைக்கு மக்களின் எதிர்ப்பு உள்ள விடயத்தை சுட்டிக்காட்டி அனுமதி வழங்கும் விடயத்தை மீள் பரிசீலிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸ் இலங்கை மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு முன்வைத்த மதுபானச்சாலை அனுமதிப்பத்திரம் சம்பந்தமான எதிர்ப்புகளை கவனத்தில் கொண்டு குறித்த மதுபானச்சாலையின் அனுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இது தொடர்பிலான விளக்கங்களை வழங்க பொத்துவில் பிரதேச செயலகம் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம்.எம். ஹரீஸை எதிர்வரும் 5 ஆம் திகதி பிரதேச செயலகத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# ஹமாஸுக்கு எதிரான போரை மீண்டும் தொடங்கிய இஸ்ரேல்!

டெல் அவிவ், டிசெ. 02

**இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கு இடையி லான போர்நிறுத்தம் நீடிக்கப்படுவதற்கான காலக்கெடு குறித்த எந்த உடன்பாடும் அறிவிக்கப்படவில்லை.**

இந்நிலையில் காசா பகுதியில் ஹமாஸுக்கு எதிரான போரை மீண்டும் தொடங்கியுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

போர் நிறுத்தத்தை மீறி ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் எல்லைக்குள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதேநேரம் பலஸ்தீன குழுக்களுக்கும் இஸ்ரேலிய படையினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



அத்தோடு காசா பகுதியில் உள்ள நுசிராட் மற்றும் புரேஜ் அகதிகள் முகாம்களுக்கு அருகில் இஸ்ரேலிய படைகள் ஷெல் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பர்மிங்காமில் உதைபந்து இரசிகர்கள் பொலிஸாருடன் கடுமையான மோதல்

## மைதானத்துக்கு வெளியே 39 பேர் கைது



லண்டன், டிசெ. 02

யூரோபா கான்பெரன்ஸ் லீக் தொடரின், லீஜியா வார்ஸாவா மற்றும் ஆஸ்டன் வில்லா அணிகளுக்கிடையிலான போட்டியின் பின்னர், மைதானத்துக்கு வெளியே ஏற்பட்ட மோதலின் போது, 39பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு பர்மிங்காமில் வில்லா பார்க் அருகே இரசிகர்களுடன் ஏற்பட்ட மோதலில் நான்கு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

அப்பகுதியின் கட்டுப்பாட்டை மீட்டெடுக்க வெஸ்ட் மிட்லாண்ட்ஸ் பொலிஸார் முயற்சித்த போதும், மோதலை கட்டுப்படுத்த முடியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்த அதிகாரிகளில் ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக வெஸ்ட் மிட்லாண்ட்ஸ் பொலிஸார் தெரிவித்தனர், மேலும் இரண்டு பொலிஸ் குதிரைகள் மற்றும் இரண்டு பொலிஸ் நாய்களும் காயமடைந்ததாக கூறினார்.

பாதுகாப்பு பயத்தின் காரணமாக ரசிகர்கள் மைதானத்திற்குள் நுழைவதைத் தடுத்து நிறுத்திய போதும், இந்த மோதல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காஸாவில் இருந்து வெளியேற அவுஸ்திரேலியர்கள் முயற்சி!

ஜெருசலேம், டிசெ. 02

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம் மேலும் நீடிக்கப்பட்டுள்ள நிலையில் காஸாவிலுள்ள 67 அவுஸ்திரேலியர்கள் வெளியேறுவதற்கு முயற்சித்து வருகின்றனர்.

வெளியேற முயற்சிக்கும் அவுஸ்திரேலியர்களுக்குத் தேவையான உதவிகளை அவுஸ்திரேலிய அரசு வழங்கி வருகின்றது.

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்புக்கு இடையிலான 4 நாட்கள் போர் நிறுத்தம் கடந்த 27 ஆம் திகதி முடிவுக்கு வந்த நிலையில், போர் நிறுத்தத்தை மேலும் 2 நாட்களுக்கு நீட்டிக்க இஸ்ரேல்-ஹமாஸ் சம்மதம் தெரிவித்தன.

இந்த நிலையில் நீட்டிக்கப்பட்ட 2 நாட்கள் போர் நிறுத்தத்தின் கடைசி நாளான நேற்று முன் தினமும் பணய கைதிகள் மற்றும் கைதிகளை விடுவிப்பதில் இரு தரப்பும் மும்முரம் காட்டின.

இதேவேளை அவுஸ்திரேலியாவில் இஸ்ரேல் - ஹமாஸ் போருக்கு எதிராக போராட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சோமாலியாவில் வெள்ளப்பெருக்கு!

## ஒரு மில்லியனுக்கும் அதிக மக்கள் இடம்பெயர்வு



மொகடிசு, டிசெ. 02

எல் நினோ காலநிலை நிகழ்வால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக சோமாலியாவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக கடுமையான மழை ஆபிரிக்காவின் தீபகற்பம் முழுவதும் பரவலான அழிவு, இடப்பெயர்வு மற்றும் மரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோப்-28 உச்சிமாநாட்டில் காலநிலை நெருக்கடி குறித்து விவாதிக்க உலகத் தலைவர்கள் டுபாயில் ஒன்றுகூடிய நிலையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சோமாலியா, கென்யா மற்றும் தெற்கு எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் குறைந்த பட்சம் 270 பேர் இறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சோமாலியாவில் மட்டும் வெள்ளத்தில் சிக்கி 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

முழு நகரங்களும் நீரில் மூழ்கியுள்ளன, ஏறக்குறைய அவர்களின் முழு மக்களையும் வேறு இடங்களில் அடைக்கலம் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஜனாதிபதி ஹசன் ஷேக் மொஹமட், நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அண்டை நாடுகளான எத்தியோப்பியா மற்றும் கென்யாவும் பரவலான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கனமழை தொடரும் என கணிக்கப்பட்டுள்ளதால் நிலைமை மேலும் மோசமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலைமை பிராந்தியத்தில் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியை அதிகரிக்கிறது என்று உலக உணவுத் திட்டம் கூறுகிறது. நோய் பரவுமோ என்ற அச்சமும் உள்ளது. (அ)

# இஸ்ரேலுடன் ஸ்பெய்ன் இராஜதந்திர மோதல்?



மட்ரிட், டிசெ. 02

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ், 'இஸ்ரேல் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு இணங்குகிறது என்பதில் தனக்கு கடுமையான சந்தேகம் உள்ளது' என்று கூறியதையடுத்து, அவர் இஸ்ரேலுடனான இராஜதந்திர மோதலை ஆழப்படுத்தியுள்ளார்.

அவரது சமீபத்திய கருத்து மூர்க்கத்தனமானது என இஸ்ரேல் கண்டனம் தெரிவித்துள்ளது. காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையின் போது 'பாலஸ்தீனியர்களை கண்மூடித்தனமாக கொன்றதாக' அவர் குற்றம் சாட்டிய சில நாட்களுக்குப் பிறகு அவரது கருத்துக்கள் வந்துள்ளன.

ஸ்பானியத் தலைவரின் சமீபத்திய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என்று அவர் கூறியதற்குப் பதிலளித்த இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் எலி கோஹன், மெட்ரிட்டில் உள்ள இஸ்ரேலின் தூதர் ரோடிகா ரேடியன்-கார்டனை ஆலோசனைக்காக திரும்பப் பெற முடிவு செய்துள்ளதாகக் கூறினார்.

ஒரு வாரத்தில் இரண்டாவது முறையாக, இஸ்ரேலுக்கான ஸ்பெயினின் தூதுவர் கண்டிப்பதற்காக அழைக்கப்பட்டார்.

சான்செஸ் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் புதிய பிரதமராக பதவியேற்றார், ஆனால் அவர் ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் தாக்குதல்களுக்கு இஸ்ரேலின் பதிலை ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களிடையே மிகவும் வெளிப்படையாக விமர்சிப்பவர்களில் ஒருவராவார்.

கடந்த வாரம் இஸ்ரேல் மற்றும் மேற்குக் கரைக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக, தனது புதிய அரசாங்கம் ஐரோப்பாவிலும் ஸ்பெயினிலும் பாலஸ்தீனிய அரசாங்கத்தை அங்கீகரிப்பதற்காக வேலை செய்யும் என்று பாராளுமன்றத்தில் கூறினார். ஸ்பெயின் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் பதவியை வகிக்கிறது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்தும் கொடிய தாக்குதலைத் தொடர்ந்து, அதை ஒழிப்பதே இலக்கு என்று இஸ்ரேல் கூறுகிறது.

ஒக்ரோபர் 7ஆம் திகதி, இஸ்ரேலுக்கும் காசாவிற்கும் இடையிலான எல்லை வேலியை தீவிரவாதிகள் உடைத்ததில் குறைந்தது 1,200 பேர் கொல்லப்பட்டனர். 240 இற்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.

அதற்குப் பிறகு, இஸ்ரேலின் பதிலடியில் 15,000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் கூறுகிறது. (அ)

# போர் நிறுத்தத்தை மேலும் நீடிப்பதற்கு ஹமாஸ் தயார்



ஜெருசலேம், டிசெ. 02

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்தை மேலும் நான்கு நாட்களுக்கு நீடிக்க ஹமாஸ் தரப்பினர் தயாராக இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற சமரசப் பேச்சுவார்த்தைக்கு பின் நான்கு நாள் போர் நிறுத்தத்தை இஸ்ரேல் அறிவித்தது.

இந்நிலையில் போர் நிறுத்தத்தை மேலும் நீடிக்க ஹமாஸ் தரப்பினர் தயாராக உள்ளனர்.

இதுவரை 63 இஸ்ரேலியர்கள் மற்றும் 20 வெளிநாட்டினரை ஹமாஸ் படையினர் விடுதலை செய்துள்ளனர். 180 பலஸ்தீனியர்களை இஸ்ரேல் அரசாங்கம் விடுதலை செய்துள்ளது.

நான்கு நாள் போர் நிறுத்தத்திற்கு ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், மேலும் இரண்டு நாட்களுக்கு போர் நிறுத்தம் நீடிக்கப்பட்டது.

இந்நிலையில், பழைய நிபந்தனைகளுடன் மேலும் நான்கு நாட்களுக்கு போர் நிறுத்தத்தை நீடிக்க ஹமாஸ் படையினர் தயாராக இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பயங்கரவாதச் சட்டம் தொடர்ந்து பயன்பாடு

## கவலை வெளியிடுகிறது அமெரிக்கா

**கொழும்பு, டிசெ. 02**
**பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவதாக வெளியாகும் தகவல்கள் கவலையளிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**



அமைதியான வழியில் ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் கைது செய்யப்படுவதும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் நடத்தப்படும் விதம் குறித்து பல தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஆகவே கருத்து சுதந்திரத்தையும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் மனிதாபிமான ரீதியில் நடத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவது அவசியம் எனவும் அமெரிக்க தூதுவர் கூறினார்.

அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி புதிய சட்டத்தை கொண்டுவர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## தேசிய தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 02
இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில், பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 76 ஆயிரத்தை கடந்துள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, இந்த ஆண்டில் இன்று வரையான காலப்பகுதியில் 76,086 பேர் டெங்கு நோய்த் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இங்கு 16,125 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், மேல் மாகாணத்தில், 35,807 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் காணப்படுமாயின் அவற்றை சுத்தமாக வைத்திருக்குமாறு பொதுமக்கள் தேசிய தொற்று நோயியல் பிரிவு அறிவுறுத்தல் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் வேலை வாய்ப்பு

கொழும்பு, டிசெ. 02
இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு நேற்று முதல் ஜப்பானில் தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஜப்பானின் நிர்மாணத்துறையில் தொழில் வாய்ப்புக்கள் இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான முதற்கட்ட தேர்வுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)



# கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

வடமராட்சி, டிசெ. 02
கரவெட்டி பிரதேச செயலகத்திக்கு உட்பபட்ட தெரிவு செய்யப்பபட்ட குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தயாரூபன் தலைமையில் இடம்பெற்றது.

ஓம் நற்பணி உதவும் கரங்களின் நிதி உதவியில் இது வழங்கப்பட்டது.

இதில் கரவெட்டி பிரதேச இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைவர் ரகுபரன் மற்றும் செயலாளர் பகீரதன், நிர்வாகிகள் கலந்துகொண்டனர். (அ-2)

# இலங்கை செஞ்சிலுவை சங்கத்தால் வடமராட்சியில் முதலுதவிப் பயிற்சி

வடமராட்சி, டிசெ. 02
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பருத்தித்துறை பிரதேச நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஆகிய பிரிவுகளுக்கு உட்பட்ட பொது சுகாதார பரிசோதகர்கள், டெங்கு கட்டுப்பாட்டு அதிகாரிகள், மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கான முதலுதவி பயிற்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் பருத்தித்துறை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.



இதில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்.மாவட்ட தலைவர் சங்கரப்பிள்ளை திரவியராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

குறித்த அதிகாரிகளுக்கான முதலுதவிப் பயிற்சிகளை முதலுதவி போதனா ஆசிரியர் நா. இலங்கேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச இலங்கை செஞ்சிலுவை சங்க தலைவர் சதானந்தன், செயலாளர் மோகனதாஸ், யாழ்ப்பாணம் கிளையைச் சேர்ந்த ஜெயக்குமார் ஆகியோர் வழங்கினர். (அ-2)

# கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தல் விசாரணை மார்ச்சுக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 02
கொழும்பை அண்டிய பகுதிகளில் 11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் மேலதிக விசாரணைகள் அடுத்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரனகொட மற்றும் 14 கடற்படை அதிகாரிகளுக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் உயர் நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

தன்னை பிரதிவாதியாக பெயரிட்டமைக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருப்பதால் அந்த தீர்ப்பு முடியும் வரை விசாரணையை ஒத்திவைக்குமாறு வசந்த கரன்னகொட கோரிக்கை விடுத்தார்.

அவர் முன்வைத்த சமர்ப்பணங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதிகளான அமல் ரணராஜா, நவரத்ன மாரசிங்க மற்றும் மஞ்சுள திலகரத்ன வழக்கு விசாரணையை மார்ச் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். (அ)

# நீதிமன்றங்களில் இனி சாட்சி கூண்டுகள் இல்லை

கொழும்பு, டிசெ. 02
நீதிமன்றங்களில் உள்ள சாட்சி கூண்டுகள் முழுமையாக அகற்றப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதிமன்றம் என்பது பயத்துடனும் சந்தேகத்துடனும் செல்லும் இடமல்ல. நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கும் அனைவரும் குற்றவாளிகள் அல்லர். சாட்சிகள் நீதித்துறை செயல்பாட்டில் உதவும் குடிமக்கள். எனவே கூண்டில் இருந்து சாட்சியமளிக்கும் 'கூண்டு முறை' மாற்றப்பட்டு, கண்ணியமான முறையில் சாட்சியம் அளிக்கும் முறை இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும்' என நீதியமைச்சர் தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நீதிமன்ற முறைமைக்கு அட்டை கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்துவதற்கான உடன்படிக்கையை மக்கள் வங்கியுடன் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டு நீதியமைச்சர் இந்த கருத்துக்களை வெளியிட்டார். (அ)

# பஸ் கட்டணம் குறையாது

கொழும்பு, டிசெ. 02
டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் சிலோன் ஒயிட் டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 27 ரூபாவினால் குறைக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இருப்பினும், பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)



## வேம்படி...

மத்தியில் கருத்து வெளியிடுகையில்,

க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றதில் தமிழ் இனத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது பெருமையாக உள்ளது. பெறுபேற்றை கல்வி நடவடிக்கையில் ஒரு படிக்கல்லாகவே பார்க்கிறேன்.

உயிரியல் கற்கையை தெரிவு செய்து மருத்துவ பீடத்துக்கு செல்ல வேண்டும் என்பதே எனது இலட்சியம். பெற்றோருக்கும் பாடசாலை சமூகத்தினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

விஞ்ஞான பாடத்துக்கும் ஆங்கில இலக்கியம், சிங்களம் ஆகிய தொகுதி பாடங்களுக்குமே தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சென்றேன். கணித பாடத்தை தரம் ஆறு முதல் தந்தையிடமே கற்றேன்.

சாதாரண தர மாணவர்கள் சாதாரண பரீட்சையை உயர்தரத்துக்கான சிறு வழிகாட்டாலாக கருதி எதிர்கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## பயங்கரவாத...

மக்கள் தமது உறவுகளை நினைவு கூருவதற்காக ஒன்றுகூடுவதை பொலிஸார் பூதாகரமாக மாற்றி விடுகிறார்கள். உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூர்ந்து தமது ஏக்கங்களை வெளிப்படுத்துவதை பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக தடுப்பது நியாயமற்றது. அமைதியான முறையில் ஒன்றுகூடும் அடிப்படை உரிமைகளை தடுத்தால் அது மாறுபட்ட முரண்பாடுகளை தோற்றுவிக்கும். வருடத்தில் ஒரு தினத்தில் தமது உறவுகளை நினைவு கூர்வதற்கு எமது மக்களுக்கு இடமளியுங்கள்", என்று நீதியமைச்சரை விளித்துக் கூறினார்.

அவருக்கு பதிலளிக்கும் விதமாக பேசிய நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ,

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளும் வகையில் 2018 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னரான சூழ்நிலைகளால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டன. இவ்வாறான பின்னணியில் 2023 மே மாதம் பயங்கரவாத திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கும் ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

இதனை தொடர்ந்து மனித உரிமை ஆர்வலர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள் உட்பட சகல தரப்பினருடன் கலந்துரையாடி உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பது பல்வேறு காரணிகளால் தாமதப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாதம் நீதிமன்ற செயல்பாடுகளுக்கு விடுமுறை வழங்கப்படுவதால் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்வரும் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதமளவில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் ஒரு தீர்மானம் எடுக்கப்படும்.

சகல தரப்பினரின்உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் வலுவான தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

மீண்டும் எழுந்த செல்வம் அடைக்கலநாதன் எம். பி., "மாவீரர் நாளன்று பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள்" - என்றார்.

இதற்கு பதிலளித்த நீதியமைச்சர்,

"மாவீரர் தினத்தன்று பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கிறேன் - என்றார். (ஐ)

## கிழக்கில்...

இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். தமிழ், முஸ்லிம்கள் என்பதலா அவர் கள் இவ்வாறு பழிவாங்கப்படுகின்றனர். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரிஷாத் பதியுதீன் வர்த்தக அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

"நான் கைத்தொழில் வர்த்தக அமைச்சை பொறுபேற்ற போது 275 சதொச கிளைகளே இயங்கின. எனது பதவிக் காலத்தில் அவற்றை 400 ஆக அதிகரித்து இந்த நிறுவனத்தை இலாபகரமானதாக ஆக்கினேன். கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் கிழக்கு மாகாணத்தில் இயங்கிய சதொச கிளைகள் திட்டமிட்டு மூடப்பட்டன. அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். 35 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் இவர்கள் வெளிமாவட்டங்களில் எவ்வாறு பணிபுரிய முடியும்? தமிழ், முஸ்லிம் என்பதனாலா இவர்கள் இவ்வாறு பழிவாங்கப்படுகின்றனர்?

எனவே, மூடப்பட்டுள்ள சதொச கிளைகளை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த வர்த்தக வாணிப அமைச்சர் ரமேஷ் பத்திரண, "நீங்கள் சொல்வது முற்றிலும் சாதாரணமானதும் நியாயமானதும்கூட. இருப்பினும், நிறுவனத்தின் இலாபத்தையும் கருத்தில் கொண்டு, அவற்றை மீளத் திறக்க நாம் நடவடிக்கை எடுப்போம்" என்று தெரிவித்தார். (ஐ)

## போதகர்...

வாக்குமூலம் அளிக்குமாறு அவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை 8 மணிநேரம் வாக்குமூலம் வழங்கினார். நேற்றைய தினமும் வாக்குமூலம் அளிப்பதற்காக குற்றப் புலனாய்வு பிரிவில் அவர் முற்பட்டிருந்தார். வாக்கு மூலம் வழங்கியதைத் தொடர்ந்து அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கைதான போதகர் ஜெரோம் நேற்று கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## போதைப்பொருள்...

தெரிவித்துள்ளார்.

சர்வதேச எய்ட்ஸ் தடுப்பு தினமான நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் தற்போது பெருமளவான போதைப்பொருள் பாவனையாளர்கள் இரத்த நாளங்களின் ஊடாக உடலில் போதைப்பொருளை ஏற்றிக் கொள்கின்றார்கள். இதனால் எய்ட்ஸ் போன்ற தொற்று நோய் பரவும் அபாயம் காணப்படுகிறது.

போதைப்பொருள் ஓர் ஊசியை பலர் பாவிப்பதனால் ஒருவருக்கு எய்ட்ஸ் தொற்று இருந்தால் அந்த ஊசியைப் பயன்படுத்தும் மற்றவரும் தொற்றுக்கு உள்ளாகக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

நாட்டில் தற்போது 5 ஆயிரத்து 500 பேர் எய்ட்ஸ் நோயாளர்கள் உள்ளனர். இதில், வடக்கு மாகாணத்தில் 90 தொற்றாளர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் 65 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒவ்வோர் ஆண்டும் எய்ட்ஸ் தொற்றுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை சராசரியாகக் கூடுகின்றது. கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் 3 தொற்றாளர்களும் இந்த ஆண்டு 4 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டனர். இவர்களுக்கான சிகிச்சைகள் யாழ். போதனா மருத்துவமனையில் வழங்கப்படுகின்றது - என்றார். (ஐ-03)

# பொலிஸ் பயங்கரவாதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுப்போம்!

### கஜேந்திரகுமார் எம். பி.

மட்டக்களப்பு, டிசெ. 02

மாவீரர் நாள் நினைவேந்தலின்போது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் மட்டக்களப்பில் 10 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த கைது நடவடிக்கைகள் அனைத்துமே மோசமான இன அழிப்பு விளைவுகளுக்கு தடை எதுவும் இல்லாமல் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக அரசியல் பாதையில் இருந்து விலகிச் செல்ல செய்து முடிப்பதற்கான முயற்சி. இதனால் பொலிஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம் - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. தெரிவித்தார்.

மாவீரர் நாள் நினைவேந்தலை முன்னெடுத்த 10 பேர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை கஜேந்திரகுமார் எம். பி. நேற்று பார்வையிட்டார்.

இதன் பின்னர் அவர் கூறுகையில்,

மட்டக்களப்பில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கடந்த 25, 27ஆம் திகதிகளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியை சேர்ந்த இருவர் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த தினத்தில் மாவீரர்களை நினைவு கூரலாம் என அரசாங்கமே தெரி வித்துவிட்டு வடக்கு, கிழக்கிலே மூதூர் சம்பூரை தவிர அனைத்து நீதிமன்றங்களிலும் தடை உத்தரவு பெறுவதற்கு பொலிஸார் முயற்சி எடுத்தபோது அனைத்து நீதிமன்றங்களிலும் நினைவுகூருவதற்கு உரிமை உண்டு என தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு என்ற வகையில் அந்த அமைப்பின் சின்னங்கள் இல்லாமல் நினைவேந்தலை நடத்த முடியும் என கட்டளை வழங்கப்பட்டது.

இந்நிலையில், அந்த நினைவேந்தலில் கலந்துகொண்டு அதனை ஒழுங்கு செய்த ஒரே ஒரு காரணத்துக்காக இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது அப்பட்டமாக இலங்கையின் மோசமான சட்டங்களுக்கு ஊடான ஒரு செயல்பாடு. இருப்பினும், இந்த கைதானது அரசியல் காரணங்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாக இருக்கின்றனவே தவிர சட்ட காரணங்களுக்காக அல்ல என்பது மிக அப்பட்டமாக தெரிகின்றது.

அந்த வகையில், நாங்கள் கைது செய்யப்பட்ட அத்தனை பேரையும் சந்தித்து பேசியபோது, அவர்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற ரீதியில் மேலதிகமான சட்ட நடவடிக்கை வேண்டும் என்றனர்.

எனவே, பொலிஸ் சட்ட ரீதியாக நடந்துகொள்கின்ற பொலிஸ் பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ளவுள்ளோம்.

தமிழ் மக்கள் நியாயமில்லாத பயங்கரவாத தடைச் சட்டத்தை தெரிந்து அதனுள் போகாமல் நடந்துகொண்டபோதும், அவர்கள் குறிவைக்கப்படுவதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியான நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அதேவேளை, நாங்கள் விளங்கிக் கொண்டு இந்த பயங்கரவாதத்தை மக்கள் மீது திணிக்கின்ற செயல்பாடுகளுக்கு அடிபணியாமல், இதை எதிர்நோக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். நாங்கள் இதனை எதிர்கொள்வோம் - என்றார். (ஐ)

## தமிழரசு...

கட்சியின் தலைமை பதவிக்கு போட்டியிடும் சுமந்திரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

மன்னாரில், நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், பதில் பொலிஸ் மா அதிபரின் நியமனம் அரசமைப்பு பேரவையின் அனுமதி பெறாமல் நடைபெற்றுள்ளது. இது சட்டத்தை மீறும் செயல். அரசமைப்பு பேரவையின் அனுமதியின்றி பிரதி பொலிஸ் மா அதிபரைக் கூட நியமிக்க முடியாது.

ஜனாதிபதி ஒட்டு மொத்தமாக அரசமைப்பை மீறி செயல்படுகிறார். இந்த விடயத்திலே வெறுமனே பதவி உயர்வு அது யார் கூடுதலாக மூத்தவராக இருக்கின்றார் என்பதை பார்க்காமல் இதற்கு உரியவரை நியமிப்பது அத்தியாவசியமாக இருக்கிறது. தற்போது அவர் நியமித்த பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் என்பவர் பலவிதமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள ஒரு நபர்.

அவர் இந்த பதவிக்கு பொருத்தமற்றவர். ஆகையால் இந்த நியமனத்தையும் நாங்கள் கண்டிக்கிறோம். அரசமைப்பை தெரிந்து கொண்டே மீறும் செயல். ஜனாதிபதி ஒருவர் அரசமைப்பை தெரிந்து கொண்டே மீறினால் ஜனாதிபதி பதவியில் இருந்து அவரை நீக்குவதற்கு அது போதுமான காரணமாக கூட இருக்கிறது.

தமிழரசு கட்சியின் தலைமைக்கு இருவர் போட்டியிடுகிறார்கள் என்பது தவறு. எங்களுடைய கட்சியின் யாப்பின் அடிப்படையில் தலைமை பதவிக்கு சிலருடைய பெயரை ஒரு குறித்த முறையிலே கட்சி உறுப்பினர்கள் பிரேரிக்கலாம். அப்படியாக இருவருடைய பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. எங்களுடைய சம்மதத்தோடுதான்.

ஆனால், மற்றவர்கள்தான் எங்களுடைய பெயர்களை பிரேரித்திருக்கிறார்கள். அப்படியாக ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் பிரேரிக்கும்போது தெரிவு எப்படி இடம்பெற வேண்டும் என்று எமது யாப்பிலே உள்ளது. ஜனநாயக கட்சி என்ற அடிப்படையிலே ஜனநாயகத்திலே பரிணாம வளர்ச்சியடைந்தோர், முதிர்ச்சி அடைகிற நிலையிலே ஒரு தலைமை பதவிக்கு பலர் தகுதி உடையவர்களாக இருப்பது அந்த கட்சியின் ஒரு பலமான விடயம். பல கட்சிகளுக்கு இவரை விட்டால் வேறு ஆள் இல்லை என்று வாழ்நாள் தலைவர்களை வைத்துள்ள கட்சிகளைப் போல் அல்லாது எங்களுடைய கட்சியிலே பலருக்கு அந்த தகுதி இருக்கிறது.

பலரின் பெயர் முன்மொழியப்படுகிறது. கடசியின் அடிப்படை உறுப்பினர்கள் 200-க்கும் மேற்பட்டவர்கள் கூடி வாக்களித்து தலைமையை தீர்மானிப்பார்கள். மிகவும் ஆரோக்கியமான ஒரு விடயமாக நான் அதனை கருதுகிறேன். எவர் வெற்றி பெற்றாலும் மற்றவர்கள் இணைந்து கட்சி அங்கத்தவர்களாக நாங்கள் செயல்படுவோம் - என்றார். (ஐ)

## வேம்படியில்...

பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 17 மாணவர்களும் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் 16 மாணவிகளும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் 6 மாணவர்களும் 9 பாடங்களில் ஏ பெறுபேற்றை பெற்றுள்ளனர். (ஐ-03-02)

## மின்சார...

மற்றும் மசகு எண்ணெய்க்கு பெறுமதி சேர் வரி அறவீடு செய்யப்படாது.

மின்சார கட்டணத்துக்கும் பெறுமதி சேர் வரி சேர்க்கப்படுவதனால் அதன் கட்டணமும் அதிகரிக்கும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நெடுந்தீவு போக்குவரத்துக்கு பயணிகள் படகு வழங்குங்கள்

## இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 02

**நெடுந்தீவு மக்களுக்கான போக்குவரத்தைச் சீராக்கும் வகையில் பயணிகள் படகொன்றை வழங்குமாறு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி கோரிக்கையொன்றை முன்வைத்தார்.**

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நெடுந்தீவுக்கான விஜயத்தை மேற்கொண்டு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றார்.

இதன்போதே இந்திய தூதுவர் கோபால் பாக்லேயிடம் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

இதன்போது இந்திய தூதுவரிடம் நெடுந்தீவு மக்களுக்கான குடிதண்ணீர்த் தேவையினை சீராக்கும் வகையில் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றையும் பெற்றுத்தருமாறும் பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்தார்.



இது தொடர்பான திட்ட வரைவை தயாரித்து வழங்குமாறும் , அதனடிப்படையில் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் இந்திய தூதுவர் வாக்குறுதியளித்தார். (அ)

# எரிபொருள் விலை மாற்றம்

கொழும்பு, டிசெ. 02

இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனம் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

ஒக்ரேன் 92 பெற்றோல் 10 ரூபாய் குறைக்கப்பட்டு 346 ரூபாயாகவும், ஓட்டோ டீசல் 27 ரூபாய் குறைக்கப்பட்டு 329 ரூபாயாகவும், மண்ணெண்ணெய் 2 ரூபாய் குறைக்கப்பட்டு 247 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், ஒக்ரேன் 95 பெற்றோல் 3 ரூபாய் அதிகரித்து 426 ரூபாயாகவும் சூப்பர் டீசல் 3 ரூபாய் அதிகரித்து 434 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சினோபெக் மற்றும் ஐ. ஓ. சி. நிறுவனங்களும் எரிபொருள் விலைகளில் திருத்தம் செய்துள்ளதாக அறிவித்துள்ளன. (அ)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது; பிரிட்டன் தூதரும் கவலை வெளியீடு

கொழும்பு, டிசெ. 02

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறுவது குறித்து இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்றூ பட்ரிக் கரிசனை வெளியிட்டுள்ளார்.

டுவிட்டரில் அவர் இதனை பதிவிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுகள் குறித்து கரிசனை கொண்டுள்ளேன். பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை நிறுத்துவதாகவும் மனித உரிமைகளை மதிக்கும் புதிய சட்டத்தினை கொண்டுவருவதாகவும் இலங்கை அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதிகளில் உறுதியாகயிருக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என அவர் பதிவிட்டுள்ளார். (அ)

# 13,588 மாணவர்களுக்கு 9 ‘ஏ’!



கொழும்பு, டிசெ. 02

வெளியிடப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, 72.7 சதவீதமான மாணவர்கள் உயர் தரத்துக்கு தகுதிப் பெற்றுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அதேநேரம், 13 ஆயிரத்து 588 பேர் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் 9 பாடங்களிலும் ஏ சித்தியை பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில், வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளுக்கு அமைய, கண்டி மஹாமாய மகளிர் கல்லூரியின் மாணவி ஒருவர் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் தர பாடசாலையின் மாணவி ஒருவர் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார்.

அத்துடன், பெறுபேறுகளின் அடிப்படையில் குறித்த பாடசாலை தமிழ் மொழிமூலம் முதலாம் இடத்தினை பெற்றுள்ளது.

இதுதவிர, கொழும்பு ரோயல் கல்லூரியை சேர்ந்த மாணவர் ஒருவர் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (அ)

# தலைமன்னார்-தனுஷ்கோடி தரைவழி முயற்சி தொடரும்

## யாழில் கூறினார் இந்திய தூதுவர்

யாழ்ப்பாணம், டிசெ. 02

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையில் தரைவழிப் பாதையை அமைப்பது தொடர்பிலான முயற்சி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர், அதற்கான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

வடக்கை இணைத்து இந்தியா-இலங்கை இடையிலான எரிபொருள் குழாய் செயற்றிட்டம் விரைவில் ஆரம்பமாகும் என்றும் கோபால் பாக்லே குறிப்பிட்டார்.

இதேவேளை, தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவை குறித்தும் அடுத்த கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்திய தூதுவர் உறுதியளித்தார்.

மேலும் அரசியல் தீர்வு விடயத்தில் கரிசனைகளைக் கொண்டுள்ள இந்தியா, 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என தொடர்ந்தும் வலியறுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாதத்துடன் இந்திய தூதுவராக இலங்கையில் தனது சேவைக் காலத்தை நிறைவு செய்யவுள்ள கோபால் பாக்லே வடக்குக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் விசேட நிதி உதவி!

யாழ்ப்பாணம், டிசெ. 02

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 100 பேருக்கு, இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள நிதியுதவிச் செயற்றிட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இந்த நிதியுதவித் திட்டத்தை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டத்துக்கான முதற்கட்ட நிதி ரூபா மூன்று மில்லியன் இன்று காலை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயினால் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் மற்றும் மாணவர் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கலாசார உறவுகளுக்கான பேரவையின் உயர்கல்விப் புலமைப்பரிசில் (ஐ.சி.சி.ஆர்) பெற்று இந்தியாவில் உயர்கல்வி பெறச் செல்லும் இந்து கற்கைகள் பீட விரிவுரையாளர்கள் இருவருக்கான அனுமதிக் கடிதமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள் மற்றும் மாணவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பொருளாதார நிலையில் சவாலுக்குட்பட்டுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் 100 பேரின் வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்காக ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் தலா ஐயாயிரம் ரூபா விசேட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



கடந்த மே மாதம் 11 ஆம் திகதி, யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கும் நிகழ்வுக்கு இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக வந்திருந்த இராஜாங்க அமைச்சர் கலாநிதி எல். முருகன் அறிவித்த படி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 100 பேருக்கு விசேட நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் சகல பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் நடப்புக் கல்வி ஆண்டில் இருந்து, அடுத்து வரும் ஒரு வருட காலத்துக்கு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## நியூஸிலாந்துடனான டெஸ்ட் பங்களாதேஷ் வலுவான நிலை!

சில்ஹெட், டிசெ. 02

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் பங்களாதேஷ் 3 விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்கள் குவித்துள்ளது. அந்த அணியின் தலைவர் நஜ்முல் ஹூசைன் ஷான்டோ அபாரமாக ஆடி சதமடித்துள்ளார்.

சில்ஹெட் நகரில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 310 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸை விளையாடிய நியூஸிலாந்து அணி 2ஆம் நாள் ஆட்ட நேர இறுதியில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 266 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்நிலையில் 3ஆம் நாள் போட்டியில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. கைல் ஜேமிசன் 7, ரிம் சௌதி ஓர் ஓட்டத்துடன் ஆட்டத்தைத் தொடங்கினர்.

கைல் ஜேமிசன் 23 ஓட்டங்கள் எடுத்தநிலையில் மொமினுல் பந்தில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். ரிம் சௌதி, 35 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மொமினுல் பந்தில் போல்ட் ஆனார். அஜாஸ் பட்டேல் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில் 101.5 ஓவர்களில் 317 ஓட்டங்களுக்கு நியூஸிலாந்து ஆட்டமிழந்தது.

பங்களாதேஷ் அணி தரப்பில் நயீம் ஹசன் 4 விக்கெட்களும் மொமினுல் 3 விக்கெட்களும் வீழ்த்தினர். ஷோரிபுல் இஸ்லாம், மெஹிதி ஹசன் மிராஸ், நயீம் ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

இதன்மூலம் பங்களாதேஷை விட முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து 7 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இதைத் தொடர்ந்து பங்களாதேஷ் தனது 2ஆவது இன்னிங்ஸை விளையாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய மஹ்முதுல் ஹசன் ஜா 8 ஓட்டங்களும், சகிர் ஹசன் 17 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். இதன் பின்னர் 3ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த நஜ்முல் ஹூசைன் ஷான்டேவும் மொமினுல் ஹக்கும் சிறப்பாக விளையாடி இன்னிங்ஸை கட்டமைத்தனர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 116 ஓட்டங்களாக இருந்தபோது மொமினுல் ஹக் ஆட்டமிழந்தார். அவர் 68 பந்துகளில் 40 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன்-அவுட்டானார்.

இதையடுத்து 4-வது விக்கெட்டுக்கு கேப்டன் நஜ்முல் ஹொசைனுடன் ஜோடி சேர்ந்த அனுபவ ஆட்டக்காரர் முஷ்பிஹூர் ரஹிம் அபாரமாக விளையாடினர்.

மறுமுனையில் சிறப்பாக விளையாடிய நஜ்முல் ஹூசைன் ஷான்டோ சதமடித்தார். ஆட்ட நேர இறுதியில் ஷான்டோ 104 ஓட்டங்களும், முஷ்பிஹூர் ரஹிம் 43 ஓட்டங்களும் எடுத்து களத்தில் உள்ளனர்.

பங்களாதேஷ் 3 விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்கள் எடுத்திருந்தது. (ஐ)

### ரி - 20 உலகக் கிண்ணம்

## முதன்முறையாக உகண்டா தகுதி!

புதுடில்லி, டிசெ. 02

இருபது -20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு முதன்முறை யாக உகண்டா அணி தகுதி பெற்றுள்ளது.

ரி - 20 உலகக் கிண்ணத் தொடர் கடந்த 2007ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதுவரை மொத்தம் 8 ரி - 20 உலகக் கிண்ணத் தொடர்கள் நடைபெற்றுள்ளன. 9ஆவது ரி - 20 உலகக் கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு மேற்கு இந்தியத் தீவுகள், அமெரிக்க நாடுகளில் நடை பெற உள்ளது. இந்தத் தொடரில் மொத்தம் 20 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.



இதில் போட்டியை நடத்தும் அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் அணி நேரடியாகவும் 2022 ரி - 20 உலகக் கிண்ணத்தில் முதல் எட்டு இடங்களைப் பிடித்த அவுஸ்தி ரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளும், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் ரி -20 தரவரிசை அடிப்படையிலும் உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளன.

மீதமுள்ள 8 அணிகள் தகுதி சுற்று அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இதன் அடிப்படையில் நடைபெற்ற தகுதி சுற்றுகளின் முடிவில் அயர்லாந்து, ஸ்கொட் லாந்து, பப்புவா நியூ கினியா, கனடா, நேபாளம், ஓமன் ஆகிய 6 அணிகள் தகுதி பெற்றன.

மேலும் கடைசி 2 அணிகளுக் கான ஆபிரிக்கா பிராந்திய தகுதி சுற்று போட்டிகள் நடைபெற்றன. இதில் 5 போட்டிகளில் விளையாடி அனைத்திலும் வெற்றி பெற்ற நமீ பியா 19ஆவது அணியாக தகுதி பெற்றது. மீதமுள்ள ஓர் இடத்துக்கு சிம்பாப்வே, உகண்டா, கென்யா அணிகளுக்கு இடையே கடுமையான போட்டி நிலவியது. இந் நிலையில் அந்த ஓர் இடத்தை நிர்ணயிக்கும் கடைசி போட்டியில் உகண்டா - ருவாண்டா அணிகள் நேற்றுமுன்தினம் மோதின. நமீபியாவில் உள்ள வின்ட்ஹோயக் நகரில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்றால் முதல் முறையாக இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறும் என்ற சூழ்நிலையில் விளையாடிய உகண்டா, முதலில் துடுப்பெடுத்தாடிய ருவாண்டா அணியை 65 ஓட்டங்களில் ஆட்ட மிழக்கச் செய்தது. இதையடுத்து 66 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய உகண்டா 8.1 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப் புக்கு 66 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் உகண்டா முதல் முறையாக இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்று சாதனை படைத் துள்ளது. உகண்டா கிரிக்கெட் அணி, ஐ. சி. சி. தொடருக்கு தகுதி பெறுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றுள்ள அணிகள் விவரம்: அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், அவுஸ்தி ரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, நியூஸிலாந்து, பாகிஸ் தான், தென்னாபிரிக்கா, இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, பப்புவா நியூ கினியா, கனடா, நேபாளம், ஓமன், நமீபியா மற்றும் உகண்டா. (ஐ)

## தென்னாபிரிக்க தொடர்; இந்திய அணிகள் அறிவிப்பு

புதுடில்லி, டிசெ. 02

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 இருபது - 20, 3 ஒரு நாள், 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்த தொடருக்கான இந்திய அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ) அறிவித்துள்ளது. இந்திய அணியை மூன்று வடிவங்களிலும் வெவ்வேறு அணித் தலைவர்கள் வழிநடத்த உள்ளனர்.

இந்த சுற்றுப்பயணத்தில் ஒருநாள் மற்றும் இருபது - 20 கிரிக்கெட் தொடருக்கான அணியில் இருந்து அணித் தலைவர் ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி ஓய்வு எடுத்துள்ளனர்.

அணிகளின் விவரம்-

இருபது -20 அணி: யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஷூப்மன் கில், ருதுராஜ் கெய்க்வாட், திலக் வர்மா, சூர்யகுமார் யாதவ் (அணித்தலைவர்), ரிங்கு சிங், ஸ்ரேயாஸ் ஐயர், இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ஜிதேஷ் சர்மா (விக்கெட் காப்பாளர்), ரவீந்திர ஜடேஜா (உப தலைவர்), வாஷிங்டன் சுந்தர், ரவி பிஷ்னோய், குல்தீப் யாதவ் , அர்ஷ்தீப் சிங், முகமது. சிராஜ், முகேஷ் குமார், தீபக் சாஹர்.

ஒருநாள் அணி: ருதுராஜ் கெய்க்வாட், சாய் சுதர்சன், திலக் வர்மா, ரஜத் பட்டிதார், ரிங்கு சிங், ஸ்ரேயாஸ் ஐயர், கே. எல். ராகுல் (அணித் தலைவர் - விக்கெட் காப்பாளர்), சஞ்சு சாம்சன் (விக்கெட் காப்பாளர்), அக்சர் பட்டேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ்,



யுஸ்வேந்திர சஹல், முகேஷ் குமார், அவேஷ் கான் , அர்ஷ்தீப் சிங், தீபக் சாஹர்.

டெஸ்ட் அணி: ரோகித் சர்மா (அணித்தலைவர்), ஷூப்மன் கில், யஷஸ்வி ஜெய்ஸ்வால், விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், ருதுராஜ் கெய்க்வாட், இஷான் கிஷன் (விக்கெட் காப்பாளர்), கே.எல். ராகுல் (விக்கெட் காப்பாளர்), ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, ஷர்துல் தாக்கூர், முகமது. சிராஜ், முகேஷ் குமார், முகமது ஷமி, ஜஸ்பிரித் பும்ரா (துணை கேப்டன்), பிரசித் கிருஷ்ணா.

இந்த தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி தொடங்கி ஜனவரி 7ஆம் திகதி நிறைவடைகிறது. (ஐ)

## விராட் கோலிக்கு சச்சின் டெண்டுல்கர் புகழாரம்

மும்பை, டிசெ. 02

என்னுடைய சாதனையை சக இந்தியரே முறியடித்து இந்திய அணியிலேயே இருப்பது எனக்கு பெரிய மகிழ்ச்சியளிக்கிறது என்று விராட் கோலிக்கு சச்சின் டெண்டுல்கர் புகழாரம் சூடியுள்ளார்.

நடந்து முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சச்சின் டெண்டுல்கரின் அதிக சதங்கள் சாதனையையும் உலகக் கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் சாதனையையும் முறியடித்தார் விராட் கோலி.

இந்நிலையில், விராட் கோலி பற்றி சச்சின் டெண்டுல்கர் கூறும்போது, “இந்திய அணிக்கு ஆடும் முன்பே நான் விராட் கோலியின் ஆட்டத்தைப் பார்த்திருக்கிறேன். இளம் வீரராக இருந்ததிலிருந்து அவரை நான் பார்த்து வருகிறேன்.

விராட் கோலி நாட்டுக்காக பல பெரிய சாதனைகளைப் படைத்து வருவதையும் தற்போது பார்த்து வருகிறேன். அவர் சாதனைகள் பல புரிவது எனக்கு மகிழ்ச்சியை தருகிறது. அவரது பயணம் தடைப்பட வாய்ப்பில்லை என்றே உறுதியாக நம்புகிறேன்.

அவரிடம் இன்னும் நிறைய கிரிக்கெட் திறமைகள் உள்ளன, குவிக்க வேண்டிய ஓட்டங்களும் நிறைய உள்ளன. நாட்டுக்காக மேலும் மேலும் சாதனைகள் படைக்க அவரிடம் தீராத வேட்கையும் ஆசையும் இன்னமும் உள்ளது. என்னுடைய சாதனையை சக இந்தியரே முறியடித்து இந்திய அணியிலேயே இருப்பது எனக்கு பெரிய மகிழ்ச்சியளிக்கிறது. நான் எப்போதுமே சொல்வேன் சாதனைகள் இந்தியாவுக்கு உரியது. இப்போதும் இந்திய அணியிடம்தான் உள்ளது - என்றார். (ஐ)



# காசா குழந்தைகளுக்கு ஒரு கடிதம்!

**- கிரிஸ் ஹெட்ஜெஸ்**
**தமிழில்: நிழல்வண்ணன்**

அன்புக் குழந்தையே!
நள்ளிரவு கடந்துவிட்டது. அட்லாண்டிக் கடலுக்கு மேலே ஆயிரக்கணக்கான அடிகள் உயரத்தில் மணிக்கு நூற்றுக் கணக்கான மைல்கள் வேகத்தில் நான் பறந்து கொண்டிருக்கிறேன். நான் எகிப்துக்குப் பயணித்துக் கொண்டிருக்கிறேன். நான் ரஃபாவில் காசா எல்லைக்குச் செல்லப் போகிறேன்.

நீ ஒருபோதும் விமானத்தில் பறந்திருக்க மாட்டாய். நீ காசாவை விட்டு வெளியே ஒருபோதும் சென்றிருக்க மாட்டாய். மக்கள் நிறைந்த தெருக்களையும் சந்துகளையும் மட்டுமே உனக்குத் தெரியும். காங்க்ரீட் கொட்டில்கள். காசாவைச் சுற்றிலும் படைவீரர்களின் காவலில் பாதுகாப்புத் தடையரண்கள் மற்றும் வேலிகளையும் மட்டுமே நீ அறிவாய். விமானங்கள் உனக்குப் பயங்கரமானவை. ஜெட் போர் விமானங்களும் தாக்குதல் ஹெலிகாப்டர்களும் டுரோன்களும் உனக்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அவை ஏவுகணைகளையும் குண்டுகளையும் வீசுகின்றன. நிலம் அதிர்கிறது. கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன. மரணம். அலறல்கள். இடிபாடுகளுக்கு அடியிலிருந்து உதவி கோரும் குரல்கள் தடைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இரவும் பகலும் அது ஓய்வதில்லை. நொறுங்கிய காங்க்ரீட் குவியல்களுக்கு அடியில் சிக்கிக் கொண்டவர்கள் உனது விளையாட்டுத் தோழர்கள், உனது பள்ளித் தோழர்கள். உனது பக்கத்து வீட்டுக்காரர்கள். கணநேரத்தில் காணாமல் போனவர்கள். அவர்களைத் தோண்டி எடுத்தபோது நீ அவர்களுடைய சுண்ணாம்புக் காரை அப்பிய முகங்களையும் உடலின் பாகங்களையும் பார்க்கிறாய். நான் ஒரு செய்தியாளன். இதைக் காண்பது எனது வேலை. நீ ஒரு



குழந்தை, இதை நீ ஒருபோதும் பார்க்கக் கூடாது. உடைந்த காங்க்ரீட்டின் கீழ் அழுகிக் கொண்டிருக்கும் உடல்கள். நீ மூச்சைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். உனது வாயை துணி கொண்டு மூடியிருக்கிறாய். நீ வேகமாக நடக்கிறாய். உனது அருகாமைப் பகுதி இடுகாடு ஆகிவிட்டது. நன்கு அறிந்த இடங்களெல்லாம் காணாமல் போய்விட்டன. நீ திகைத்துப் போய் நிற்கிறாய். நீ எங்கிருக்கிறாய் என்பதே உனக்குத் தெரியவில்லை.

நீ பயந்து போயிருக்கிறாய். அதிர்வெடிக்கு மேல் அதிர்வெடி. நீ அழுகிறாய். உனது அம்மா அல்லது அப்பாவைக் கட்டிப்பிடித்துக் கொள்கிறாய். காதுகளைப் பொத்திக் கொள்கிறாய். ஏவுகணையில் வெண்ணிற வெளிச்சத்தைக் காண்கிறாய், அது வெடிப்பதற்குக் காத்திருக்கிறாய். அவர்கள் ஏன் குழந்தைகளைக் கொல்கிறார்கள்? நீ என்ன செய்தாய்? ஏன் ஒருவராலும் உன்னைப் பாதுகாக்க முடியவில்லை. நீயும் காயமடைவாயா? உனது ஒரு காலையோ கையையோ இழந்துவிடுவாயா? உனது பார்வை பறிபோய்விடுமா? நீ சக்கர நாற்காலியில் தஞ்சமடைவாயா? நீ ஏன் பிறந்தாய்? அது ஏதாவது நல்லதற்கா? அல்லது இதற்குத் தானா? நீ வளர்ந்து பெரியவனாக-பெரியவளாக ஆவாயா? நீ மகிழ்ச்சியாய் இருப்பாயா? உனது நண்பர்கள் இல்லாது போனால் உனக்கு எப்படியிருக்கும்? அடுத்தது யார் சாவார்? உன் அம்மாவா? அப்பாவா? உனது சகோதரர்களா? சகோதரிகளா? விரைவில், உனக்குத் தெரிந்த ஒருவர் காயமடைவார், உனக்குத் தெரிந்த ஒருவர் இறந்துபோவார்.

இருளில் குளிர்ந்த சிமெண்ட் தரையில் நீ படுத்திருப்பாய். அலைபேசிகள் துண்டிக்கப்பட்டிருக்கும். இணைய இணைப்பு இருக்காது. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது உனக்குத் தெரியாது. வெளிச்ச மின்னல்கள் தான் தெரிகின்றன. வெடிகளின் பேரதிர்வுகள் அலை அலையாய் வருகின்றன. எங்கும் அலறல்கள். எதுவும் நிற்கவில்லை.

உனது அம்மாவோ அப்பாவோ உணவுக்காக, தண்ணீருக்காக அலைகிறபோது நீ அதற்காகக் காத்திருக்கிறாய். பயங்கர உணர்வு உனது வயிற்றைக் கவ்வுகிறது. அவர்கள் திரும்பி வருவார்களா? அவர்களை நீ மீண்டும் காண்பாயா? உனது சின்னஞ்சிறு வீடுதான் அடுத்ததா? குண்டுகள் உன்னைக் கண்டுபிடித்து விடுமா? பூமியில் இதுதான் உனது கடைசி நொடிகளா?

நீ அழுக்கடைந்த உப்பு நீரைக் குடிக்கிறாய். அதனால் உனக்கு நோய் வருகிறது. உனது வயிறு எரிகிறது. ரொட்டிக் கடைகள் அழிக்கப்படுகின்றன. ரொட்டி எங்கும்



**எங்களால் உனக்கு உதவ முடியவில்லை. இது எங்கள் மனதைக் கனக்கச் செய்யும் குற்ற உணர்வாகும். நாங்கள் முயற்சி செய்தோம். ஆனால் நாங்கள் போதுமான அளவுக்கு முயற்சி செய்யவில்லை.**

இல்லை. நீ ஒரு நாளைக்கு ஒரு வேளை கூட உண்ண முடியாமலிருக்கிறாய். பாஸ்தாவோ. வெள்ளரிப் பிஞ்சோ விரைவிலேயே உனக்குப் பெரும் விருந்தாய்த் தெரியும்.

கந்தைகளால் ஆன உனது கால்பந்தினை உன்னால் விளையாட முடியவில்லை. பழைய செய்தித்தாள்களால் ஆன உனது பட்டத்தை உன்னால் பறக்கவிட முடியவில்லை.



நீ அயல்நாட்டுச் செய்தியாளர்களைப் பார்த்திருக்கிறாய். நாங்கள் ஊடகம் என்று பொறிக்கப்பட்ட பல அடுக்குகள் கொண்ட மேலங்கியை அணிகிறோம். எங்களுக்குத் தலைக்கவசம் இருக்கிறது. எங்களிடம் புகைப்படக் கருவிகள் இருக்கின்றன. நாங்கள் ஜீப் வாகனத்தில் பயணிக்கிறோம். குண்டுகள் வீழ்ந்து வெடித்த பிறகும் துப்பாக்கிச் சூடு முடிந்த பிறகும் நாங்கள் அங்கு வருகிறோம். காபி அருந்திக் கொண்டு வெகுநேரம் அமர்ந்திருக்கிறோம், பெரியவர்களிடம் பேசுகிறோம், பிறகு சென்று விடுகிறோம். வழக்கமாக நாங்கள் குழந்தைகளிடம் நேர்காணல் செய்வதில்லை. ஆனால் குழந்தைகள் நீங்கள் எங்களைச் சுற்றிக் கூடுகிறபோது, நான் உங்களிடம் நேர்காணல் செய்திருக்கிறேன். நீங்கள் சிரித்துக் கொண்டே சுட்டிக்காட்டி எங்களிடம் உங்களைப் படம் பிடிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

காசாவில் நான் ஜெட் விமானங்களின் குண்டுவீச்சின் போது இருந்திருக்கிறேன். நீங்கள் பிறக்கும் முன்பே நிகழ்ந்த வேறு போர்களிலும் குண்டுவீச்சின் போது நான் இருந்திருக்கிறேன். நானும் மிகமிக அச்சப்பட்டிருக்கிறேன். இன்னும் கூட அதைப் பற்றிக் கனவு காண்கிறேன். காசாவின் படங்களைப் பார்க்கிறபோது, இந்தப் போர்கள் இடியும் மின்னலையும் போல வேகத்துடன் என்னிடம் திரும்பி வருகின்றன. நான் உன்னைப் பற்றி நினைக்கிறேன்.

போர் நிகழ்வுகளின் போது இருந்த நாங்கள் எல்லோருமே எல்லாவற்றையும் விடப் போரை மிகவும் வெறுக்கிறோம், ஏனென்றால் அது குழந்தைகளுக்கு இழைத்திருக்கும் தீங்கு கண்டு.

நான் உங்களுடைய கதையைச் சொல்ல முயற்சி செய்தேன். நான் உலகுக்குச் சொல்ல முயற்சி செய்தேன்: ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு தசாப்தமும் நீங்கள் மக்களிடம் கொடூரமாக நடந்து கொள்கிறபோது, நீங்கள் மக்களுக்கு சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் மறுக்கிறபோது, மக்களைத் திறந்தவெளிச் சிறையில் சிக்கவைத்து அவமதிக்கிறபோது, மிருகங்களைக் கொல்வதைப் போல மக்களை நீங்கள் கொல்கிறபோது, அவர்களுக்குப் பெருங்கோபம் வருகிறது அவர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்டதைப் பிறருக்குச் செய்கிறார்கள். இதை நான் மீண்டும் மீண்டும் உலகுக்குச் சொல்கிறேன். ஏழு ஆண்டுகளாகச் சொல்கிறேன். யாரும் கேட்பதில்லை. இப்போது இது.

மிகவும் துணிச்சலான பாலஸ்தீனிய இதழியலாளர்கள் இருக்கிறார்கள். இந்தக் குண்டுவீச்சுத் தொடங்கியதிலிருந்து அவர்களில் முப்பத்தியொன்பது பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வீரநாயகர்கள். அதேபோலத்தான் உங்கள் மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர்களும் செவிலியர்களும். அதேபோலத்தான் ஐ.நா.வின் ஊழியர்களும். அவர்களில் எண்பத்தொன்பது பேர் இறந்துபோய்விட்டார்கள். அதேபோலத்தான் அவசர ஊர்தி ஓட்டுநர்களும் மருத்துவ உதவியாளர்களும். அதேபோலத்தான் இடிபாடுகளில் காங்க்ரீட் பலகைக ளைத் தங்கள் கரங்களால் அகற்றும் மீட்புக்குழுவினரும். அதேபோலத்தான் குண்டு வீச்சுக்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கும் உங்கள் அப்பாக்களும் அம்மாக்களும்.

ஆனால் நாங்கள் அங்கு இல்லை. இந்த முறை நாங்கள் இல்லை. நாங்கள் உள்ளே வரமுடியது. நாங்கள் அனுமதிக்கப்படவில்லை.

உலகெங்குமிருந்து செய்தியாளர்கள் ரஃபாவில் உள்ள எல்லைக் கடவுக்குச் சென்று கொண்டிருக்கிறோம். ஏனென்றால் நாங்கள் இந்தப் படுகொலையைப் பார்த்துக் கொண்டு எங்களால் ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாது. நாளொன்றுக்கு 160 குழந்தைகள் உட்பட ஏராளமான மக்கள் இறந்துபோகிறார்கள். இந்தப் இனப்படுகொலை நிறுத்தப்பட வேண்டும் எனவே நாங்கள் அங்கு செல்கிறோம். நாங்கள் அங்கு செல்கிறோம், ஏனென்றால் உங்களைப் போன்ற குழந்தைகள் எங்களுக்கும் இருக்கிறார்கள். விலைமதிப்பில்லா, கள்ளங்கபடமற்ற, அன்புக்குரிய குழந்தைகள் இருக்கிறார்கள். நாங்கள் அங்கு செல்கிறோம் ஏனென்றால் நீங்கள் உயிர்வாழ வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

ஒருநாள் நாம் சந்திப்போம் என்று நம்புகிறேன். நீ



பெரியவனாக ஆகியிருப்பாய், நான் வயதானவனாக ஆகியிருப்பேன். இருந்தாலும் இப்போதே உன்னைவிட நான் மிகவும் வயதானவன் தான். உனக்கான எனது கனவில் நான் உன்னைச் சுதந்திரமானவனாக, பாதுகாப்புடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கக் காண்பேன். யாரும் உன்னைக் கொல்வதற்கு முயற்சி செய்ய மாட்டார். குண்டுகள் நிரம்பிய விமானங்களில் அல்ல, மக்கள் நிரம்பிய விமானங்களில் நீ பறந்து செல்வாய். நீ எந்த வதைமுகாமிலும் அடைக்கப்பட்டிருக்க மாட்டாய். நீ இந்த உலகைக் காண்பாய். நீ வளர்வாய், உனக்குக் குழந்தைகள் பிறப்பார்கள். உனக்கும் வயதாகும். இந்தத் துன்பத்தை நீ நினைவில் வைத்திருப்பாய், ஆனால் அதன் பொருள் துன்பத்தில் இருக்கும் மற்றவர்களுக்கு நீ உதவ வேண்டும் என்பதாகும். இது எனது நம்பிக்கை. இது எனது வேண்டுதல்.

எங்களால் உனக்கு உதவ முடியவில்லை. இது எங்கள் மனதைக் கனக்கச் செய்யும் குற்ற உணர்வாகும். நாங்கள் முயற்சி செய்தோம். ஆனால் நாங்கள் போதுமான அள வுக்கு முயற்சி செய்யவில்லை. நாங்கள், செய்தியாளர்கள் பலர், ரஃபா செல்வோம். காசாவின் எல்லைக்கோட் டுக்கு வெளியே நின்று எங்கள் எதிர்ப்பைத் தெரிவிப் போம். நாங்கள் எழுதுவோம், திரைப்படம் எடுப்போம். இதைத்தான் நாங்கள் செய்யப் போகிறோம். அது ஒன்று பெரிய விடயம் அல்ல. சிறிதுதான். நாங்கள் உங்கள் கதையை மீண்டும் சொல்வோம்.

இது ஒருவேளை உங்களிடம் மன்னிப்பைக் கேட்பதற்குரிய உரிமையை எங்களுக்கு நீங்கள் அளிக்கப் போதுமானதாக இருக்கலாம்.

(- கிரிஸ் ஹெட்ஜெஸ், புலிட்சர் விருதுபெற்ற இதழியலாளர். நியூயார்க் டைம்ஸ் இதழின் அயல்நாட்டுச் செய்தியாளராக பதினைந்து ஆண்டுகள் பணியாற்றியவர். அவர் அந்த இதழுக்கான மத்தியக் கிழக்குப் பிரிவின் தலைவராகவும் பால்கன் பிரிவு தலைவராகவும் இருந்துள்ளார்.)

# இந்தியாவைப் புறக்கணித்து முஸ்லிம் நாடுகளுடன் நெருங்குகிறதா மாலைதீவு?

முகமது ஷாஹித்

மாலத்தீவின் புதிய அதிபர் முகமது முய்சு எடுத்துள்ள ஒரு முடிவு, அவர் இந்திய எதிர்ப்பை கடைபிடிக்கிறார் என்ற கருத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

மாலத்தீவின் புதிய அதிபர் முகமது முய்சு, தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக துருக்கி சென்றுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை துருக்கி சென்றடைந்த அவர், நவம்பர் 29 ஆம் தேதி வரை அங்கிருந்தார். பின், கோப் 28 மாநாட்டில் பங்கேற்க, நவம்பர் 30 ஆம் தேதி ஐக்கிய அரபு அமீரகத்திற்குச் சென்றிருக்கிறார்.

இந்த மாநாட்டின்போது, அவர் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடியையும் துபாயில் சந்திக்க வாய்ப்புள்ளது.

மாலத்தீவில் புதிதாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் அதிபர்கள், வழக்கமாக இந்தியாவுக்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், தற்போது பதவியேற்றுள்ள அதிபர் முகமது முய்சு இந்தியாவிற்கு வராமல், துருக்கி சென்றுள்ளதால், அவர் மீதான இந்தியா எதிர்ப்பு பிம்பம் வலுப்பெற்றுள்ளது.

இவர், இந்த மாதம் அதிபராக பதவியேற்பதற்கு முன்னும், ஐக்கிய அரசு அமீரகத்திற்கு சென்றார். அப்போது, அபுதாபியன் நிதி மூலமாக மாலே விமான நிலையத்திட்டதிற்காக, மாலத்தீவுக்கு 80 மில்லியன் டாலர்கள் வழங்கப்படும் என உறுதி செய்யப்பட்டது.

அந்த சந்திப்பிற்கு பிறகிலிருந்து, மாலத்தீவு நிதி உதவிக்காக இந்தியாவை அதிகம் சார்ந்திருக்க வேண்டியதில்லை என நம்பப்படுகிறது.

மாலத்தீவின் அதிபர் முய்சு, தனது முதல் அதிகாரப்பூர்வ வெளிநாட்டுப் பயணத்திற்காக சவூதி அரேபியாவைத் தேர்ந்தெடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், அந்தத் திட்டத்தினை அவர்களால் இறுதி செய்ய முடியவில்லை.

அதன்பின், துருக்கி அதிபர் ரெசெப் தையிப் எர்துவானின் அழைப்பை ஏற்று, முய்சு துருக்கி செல்ல முடிவு எடுத்தார். இந்த பயணத்திற்கு பிறகு, விரைவிலேயே அவர் சவூதி அரேபியாவுக்கும் செல்வார் என கூறப்படுகிறது.



இதற்கிடையே, மாலத்தீவின் புதிய அதிபர் முகபது முய்சு, தனது முதல் பயணமாக துருக்கியை ஏன் தேர்ந்தெடுத்தார், ஏன் அங்கு சென்றார் என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

இதற்கு நிதி உதவிதான் காரணம் என்கிறார் அப்சர்வர் ரிசர்ச் பவுண்டேஷனினின் இணை ஆராய்ச்சியாளர் ஆதித்யா சிவமூர்த்தி.

அதிபரான பிறகு, முய்சு, தன்னை இந்தியா அல்லது சீனாவின் ஆதரவாளராக சர்வதேச அரங்கில் காட்ட விரும்பவில்லை என்கிறார் ஆதித்யா.

“முய்சு எந்த நாட்டுடனும் தன்னை நெருக்கமாகக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஏனென்றால் அதிபரான பிறகு தனது முதல் பேட்டியில், அவர் சீனா அல்லது இந்தியாவுக்கு ஆதரவானவர் அல்ல, மாலத்தீவுக்கு ஆதரவானவர் என கூறியிருந்தார். அவரது முதல் அலுவல் சார்ந்த அதிகாரப்பூர்வ சந்திப்பு பிரிட்டிஷ் உயர் அதிகாரிகளுடன் தான் நடந்தது.

முய்சு தன்னை எந்த அணியையும் சேராதவராக காட்டிக் கொள்கிறார். பதவியேற்பதற்கு முன்பு சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்குச் சென்ற அவர், தற்போது துருக்கி சென்றுள்ளார். மாலத்தீவிற்கு பொருளாதார உதவிக்காக சீனா-இந்தியாவிற்கு பதிலாக புதிய வாய்ப்புகளை அவர் தேடுகிறார்,” என்கிறார் ஆதித்யா சிவமூர்த்தி.

அதேவேளையில், இஸ்லாமியர்களின் செல்வாக்கு முய்சுவின் அரசுக்கு இருப்பதாகவும் அவர் கூறுகிறார். “இதுவும் கூட ஒரு காரணமாக இருக்கலாம். அதனால் தான், அவர் முதலில் துருக்கிக்குச் சென்றுள்ளார்,” என்றார் ஆதித்யா.

முய்சு துருக்கி அதிபர் எர்டோகனை சந்தித்துள்ளார்.



இந்த சந்திப்பின்போது, ஏதேனும் உதவிகள் குறித்து துருக்கி அதிபர் மாலத்தீவின் அதிபருக்கு உறுதி கொடுத்தாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இருப்பினும், துருக்கியில், மாலத்தீவின் தூதரகத்தை திறப்பது குறித்து துருக்கி நிர்வாகத்துடன் தனது அரசாங்கம் கலந்துரையாடலை ஆரம்பிக்கும் என முய்சு கூறியுள்ளார்.

### மாலத்தீவு முஸ்லீம் நாடுகளுடன் நெருக்கம் காட்டுகிறதா?

மாலத்தீவு, இந்தியப் பெருங்கடலில் சுமார் 1200 தீவுகளைக் கொண்ட ஒரு நாடாகும். அதன் மக்கள் தொகையில் 98 சதவீதம் பேர் சுன்னி முஸ்லீம்கள். மாலத்தீவு குடியுரிமையைப் பெற யாராவது விரும்பினால், அவர்கள் முஸ்லிமாக இருப்பது அவசியம். மாலத்தீவு ஒரு குடியரசு, அங்கு ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டது.

2004 சுனாமிக்குப் பிறகு, மாலத்தீவில் சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. மாலத்தீவின் புனரமைப்புக்கு இந்த நாடுகள் பெரிதும் உதவின.

இந்தியா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக மாலத்



தீவு வளைகுடா நாடுகளுடன் சிறந்த உறவைக் கொண்டுள்ளது. முஸ்லீம் நாடுகளுடனான உறவை மேம்படுத்த முயற்சிப்பதாகவும் முய்சு கூறி வருகிறார்.

தெற்காசிய நிபுணரும் ஆய்வாளருமான சத்தியமூர்த்தி கூறுகையில், மாலத்தீவின் பொருளாதாரம் தற்போது மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகவும், மாலத்தீவின் பொருளாதாரம் சுற்றுலா மற்றும் மீன்வளத்தை மட்டுமே சார்ந்துள்ளதாகவும் கூறினார்.

அதற்கு இயற்கை வளங்களோ, எந்தத் தொழிலோ இல்லை, அதனால் மற்ற நாடுகளைச் சார்ந்தே இருக்கிறது என்கிறார்கள், நிபுணர்கள்.

“எந்த நாடு முய்சுவுக்கு நிதி உதவி தருவதாக உறுதியளிக்கிறதோ, அவர் அந்த நாட்டிற்கு செல்கிறார். அந்த வகையில்தான் அவர் துருக்கிக்கு சென்றிருக்கலாம்,” என்றார் சத்தியமூர்த்தி.

முஸ்லீம் நாடுகளுடன் நெருங்கி பழகுவது முதலில் உள்நாட்டிலும், இரண்டாவது சர்வதேச அளவிலும் பயனடையலாம் என்கிறார் ஆதித்ய சிவமூர்த்தி.

“உள்நாட்டு அளவில், இந்தக் கொள்கையால் மக்களை மகிழ்ச்சியடையச் செய்ய முடியும், ஏனெனில் மாலத்தீவு மக்கள், வளைகுடா நாட்டினர் தங்களின் நல்ல நண்பர்கள் என்று உணர்கிறார்கள். வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், வளைகுடா நாடுகளிடம் நிறைய பணம் இருப்பதால், அவர்களிடம் இருந்து நிதி உதவியும் பெற முடியும்,” என்கிறார் ஆதித்ய சிவமூர்த்தி.

### மாலத்தீவு-இந்தியா உறவு எப்படி இருக்கிறது?

முய்சுவின் தேர்தல் பிரச்சாரம் முழுவதும் இந்தியாவே வெளியேறு என்ற பொருள்படும்படி, இந்தியாவுக்கு எதிரானதாக இருந்தது. மாலத்தீவில் வெளிநாட்டு ராணுவ வீரர்களை தங்க அனுமதிக்க மாட்டோம் என தனது தேர்தல் பிரச்சாரத்தின்போது முய்சு அறிவித்திருந்தார்.

மாலத்தீவில், சுமார் 70 இந்திய ராணுவ வீரர்கள் தங்கியுள்ளனர். அவர்கள், இந்தியா நிறுவியுள்ள ரேடார்கள் மற்றும் விமானங்களை கண்காணித்து வருகின்றனர்.

இருப்பினும், இவ்விஷயத்தில், முய்சுவின் நிலைப்பாடு மாறியிருப்பதாகத் தெரிகிறது. முன்பு மாலத்தீவில் 100க்கும் மேற்கபட்ட வெளியாட்டு ராணுவத்தினர் இருப்பதாகக் கூறிவந்த அவர், தற்பேபது பதவி ஏற்றப் பிறகு, 60-70 ராணுவ வீரர்கள் இருப்பதாகக் கூறி வருகிறார்.

“அதேவேளையில், புவிசார் அரசியல் சூழ்நிலையைப் பார்த்தால், இந்தியா அல்லது சீனாவுக்கு எதிராக மாலத்தீவு செல்ல முடியாது என்று தோன்றுகிறது,” என்றார் ஆதித்யா.

“முய்சுவுக்கு முன்பே, பல மாலத்தீவு அதிபர்கள் வளைகுடா நாடுகளுக்குச் சென்று அவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்பியுள்ளனர். ஆனால் இந்த நாடுகளால் இந்தியாவின் இடத்தைப் பிடிக்க முடியாது, ஏனென்றால் மாலத்தீவு அத்தகைய இடத்தில் உள்ளது, இதன் காரணமாக இரண்டும் ஒன்றுக்கொன்று முக்கியமானவை.

இந்தியா மீதான மாலத்தீவின் கடுமையான நிலைப்பாடு ஒரு தற்காலிக பிரச்னை. இருதரப்பு உறவுகளில் இந்தப் பிரச்சினை மிக விரைவில் தீர்க்கப்படும்,” என்றார் சத்தியமூர்த்தி.

மேலும், முகமது முய்சுவின் பதவியேற்பு விழாவிற்கு, மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜூ சென்றிருந்ததாகவும், அப்போது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் என இருதரப்பும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் கூறுகிறார் சத்தியமூர்த்தி.

அதேநேரத்தில், மாலத்தீவுக்கு அதிக கடன்கள் இருப்பதால், இந்த நேரத்தில் அந்தக் கடன்களை மறுகட்டமைப்பு செய்ய வேண்டிய சூழலில் மாலத்தீவு இருப்பதாக ஆதித்யா கூறுகிறார்.



“இந்த காரணத்திற்காக, மாலத்தீவுக்கு இந்தியா மிகவும் தேவைப்படுகிறது, எனவே அவர்களால் இந்திய அரசாங்கத்தை தனிமைப்படுத்த முடியாது. மாலே விமான நிலைய விரிவாக்கத்திற்காக 134 மில்லியன் டாலர் கூடுதல் கடனாக இந்தியாவும் அறிவித்திருந்தது. புவியியல் ரீதியாக, மாலத்தீவு இந்தியாவிற்கு மிக அருகில் உள்ளது. மேலும், அதன் பெரும்பாலான வர்த்தகம் இந்தியாவுடனோ அல்லது இந்தியா மூலமாகவோ தான் நடக்கிறது. இதனுடன் இந்தியாவுடன் பல பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் கொண்டுள்ளது,”என்கிறார் ஆதித்யா.

தொடர்ந்து பேசிய அவர், “மாலத்தீவின் பெரும்பாலான மக்கள் வேலை, படிப்பு மற்றும் சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வருகிறார்கள், ஏனெனில் இந்தியாதான் மிக அருகில் உள்ளது. இவை அனைத்தும் மாலத்தீவை இந்தியாவுடன் நெருக்கமாக வைத்திருக்கும் காரணிகள். மாலத்தீவுக்கான இந்தியாவின் பொருளாதார உதவி குறையலாம், ஆனால், இந்தியாவின் செல்வாக்கு குறையாது,”என்றார்.

### யார் இந்த முகமது முய்சு?

45 வயதான முய்சு, சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளார். தலைநகர் மாலேயின் மேயராக இருந்துள்ளார். ஏழு ஆண்டுகள் நாட்டின் கட்டுமான அமைச்சராக இருந்தார்.

மேயராக இருந்தபோது துருக்கிக்கு சென்று வந்தார். அப்போதும் துருக்கியே அவரை அழைத்திருந்தது.

2023ல் தனது அரசாங்கம் அமைந்தால், சீனாவுடனான உறவை வலுப்படுத்துவேன் என்று ஓராண்டுக்கு முன் கூறியிருந்தார். மாலத்தீவில் சீனா அதிக அளவில் முதலீடு செய்கிறது.

அப்போது, முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனின் வழிகாட்டுதலின்படி 2023ல் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்றும், உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் சீனாவுடனான வலுவான உறவின் மற்றொரு அத்தியாயத்தை எழுதுவோம் என்றும் கூறியிருந்தார்.

முய்சு நாட்டின் எட்டாவது அதிபர் ஆவார். அவர் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீனுக்கு நெருக்கமானவராகக் கருதப்படுகிறார். அவரது ஆட்சியின் போது மாலத்தீவுக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் மிகவும் ஆழமாக இருந்தன.

கடந்த ஆண்டு டிசம்பரில், ஊழல் குற்றச்சாட்டில் அப்துல்லா யாமீனுக்கு 11 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவருக்கு 5 மில்லியன் டாலர் அபராதமும் விதிக்கப்பட்டது.

யாமீன் 2023 தேர்தலில் வேட்பாளராக பங்கேற்க விரும்பினார், ஆனால் கிரிமினல் வழக்கு காரணமாக அவரால் போட்டியிடமுடியவில்லை. அத்தகைய சூழ்நிலையில் அவர் முய்சுவை தனது பினாமியாக களமிறக்கினார் என்று நம்பப்படுகிறது.